# சத்திய வேத பாதுகாவலன்

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

| 81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 6-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 35-ம் இலக்கம் |
|---|---|---|


## சுதேச வர்த்தமானம்

### கல்லோயா விசாரணைக் கம்மிஷன்

கல்லோயாக் கலகம்பற்றி விசாரணை நடத்துவதற்குத் தனிஆளைக்கொண்ட கம்மிஷன் ஒன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்தது. இந்தக்கம்மிஷனில் கடமையாற்றும்படி அதுவிடுத்திருந்த அழைப்பை நீதியரசர் ரி. எஸ். பெர்னண்டோ அவர்கள் ஏற்றிருக்கின்ருர்.

### பனங்கழியிலிருந்து ஜாம்

பொலிகண்டியிலே நவமாக அமைக்கப்பட்டுள்ள பனம்பொருள் ஆராய்ச்சி நிலையத்தில் இப்போது பனங்கழியிலிருந்து "ஜாம்" தயாரிக்கப்படுகிறது. இந்த ஜாம் தற்போது வல்வெட்டித்துறையிலுள்ள கடைகளில் விற்பனைவுக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. தங்கள்நாட்டுப் பனங்கழியிலிருந்து தயாரிக்கப்பட்டபடியால் மக்கள் அதனை விரும்பிவாங்குகின்ருர்களாம்.

### மோட்டர்சைக்கிள் விபத்து

கொடிகாம றெயில்வேஸ்ரேஷன் உதவிஸ்ரேஷன்மாஸ்றரான திரு. ஏ. நடராசா அவர்கள் சென்றவெள்ளிக்கிழமை ஓர்மோட்டர்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, வரணி அரசினர் பாடசாலைக்குச் சமீபமாக இரட்டைமாட்டு வண்டியொன்றுடன் மோதிப் படுகாயமுற்றதன் காரணமாக மறுநாள் அதிகாலை யாழ்ப்பாண அரசினர்ஆஸ்பத்திரியில் மரணமாயினர். 35 வயதுடையஇவர் பருத்தித்துறையிலே கம்பாமூலையைச் சேர்ந்தவர். கொடிகாமஸ்ரேஷனிலே ஓ. ஐ. சி. ஆகக் கடமைபார்த்துவந்தவர். கொடிகாமத்திலிருந்து தமதுவீட்டுக்குத் திரும்பும்போதே இந்தவிபத்து நிகழலாயிற்று.

### சீமெந்துத் தொழிற்சாலை

காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையின் வாலாறுகளை யாழ்ப்பாணப் பிரதிநிதியான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்அவர்கள் எடுத்துக்கூறி, அங்கே இரண்டாவதுசூளை அமைக்கப்பட மாட்டாதென்று கைத்தொழில் மந்திரி தெரிவித்திருப்பதையிட்டுப் பின்வரும்கேள்விகளைப் பொறித்திருக்கிருர் (1) இப்போது இரண்டாவது அல்லது மூன்ருவது சீமெந்துத் தொழிற்சாலைகளை அமைக்க உத்தேசிக்கப்படும் புதியஇடங்களிலே அத்தொழிற்சாலைக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களின் தாத்தைப்பற்றியாவது, அளவைப்பற்றியாவது எத்தகைய ஆராய்ச்சியேனும் நடைபெற்றுள்ளதா? (2) அத்தகைய ஆராய்ச்சி. முயற்சிகள் பூர்த்தியாக எவ்வளவு காலம் எடுக்கும்? (3) இந்தஆராய்ச்சிகளின் முடிவு அனுகூலமாய்இருந்தாலும் இரண்டாவது சீமெந்துத்தொழிற்சாலையை அமைக்க எவ்வளவுகாலஞ்செல்லும்? (4) அதற்குக் குறைந்த பட்சம் இன்னுமோர் ஐந்துவருடம் செல்லாதா? அதுவரையுள்ள காலத்தில் இந்தநாடு இறக்குமதியாகும் சீமெந்துடன்மாத்திரம் திருப்தியடைய முடியுமா?

### ஆங்கிலத்திலே கூட்டநடவடிக்கைகள்

அரசாங்க கூட்டுறவுப்பகுதி உதவி இன்ஸ்பெக்றர்மார் சங்கத்தின் ஆருவதுவருடாந்தகூட்டம் கொழும்பிலே ஜி. ஓ. எச். ஹொட்டலில் சென்ற 2-ந் திகதி நடந்தேறியது. கூட்டநடவடிக்கைகளையெல்லாம் ஆங்கிலத்திலேயே நடத்துவதென அக்கூட்டத்தில் ஓர் பிரோரணை நிறைவேறியது. அதனை எதிர்த்து அங்கத்தவர்ஒருவர் சிங்களத்தில் பேசமுயன்ருர். ஆனுல், ஏனையோர் கூச்சலிட்டு அவரைப்பேசவிடாமல் தடுத்தார்கள். அதனுல்அவர் கூட்டத்தை விட்டு வெளியேறவேண்டியதாயிற்று. கூட்டத்திலே நிதிமந்திரியும் சமுகமாயிருந்தார்.

### திடீர்வேலைநிறுத்த விலக்கு

முன்னறிவித்தல் கொடுக்காமலே திடீரென வேலைநிறுத்தங்கள் செய்வதைச் சட்டவிரோதமாக்கிவிடுமாறு அரசாங்கம்விரைவிலே நடவடிக்கை எடுக்குமெனத் தெரியவருகிறது. எனினும், வேலைநிறுத்தஞ் செய்யும்விஷயமாய்த் தொழிலாளர்களுக்குள்ளஉரிமை பறிக்கப்படமாட்டாது. ஆயின் முதலாளி-தொழிலாளி தகராறுகளை மூந்த மத்தியஸ்தமூலமோ, அன்றேல் வேறுஏதாவது வழிவகையை மேற்கொண்டோ தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டுமென்று சட்டரீதியாக வலியுறுத்தப்படும். மத்தியஸ்த ஸ்தாபனமும் கைத்தொழிற் தகாறுகளைத் தீவிரமாகவும், இலகுவாகவும் தீர்க்கக்கூடியமுறையிலே அமைக்கப்படவிருக்கிறது.

### அரசாங்க புதியகல்வித்திட்டம்

அரசாங்கத்தின் புதியகல்வித்திட்டம் 1957-ம்ஆண்டு தைமுதல் நடைமுறைக்குவருமென்றும், அதன்பயனுகப் பாடத்திட்டத்திலும், நோஅட்டவணையிலும் பெரும்மாறுதல்கள் ஏற்படுமென்றும், சாதனுமுறைக் கல்வியை அடிப்படையாகவைத்தே திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்றும் கல்விமந்திரி பாராளுமன்றத்தில் அறிவித்திருக்கின்ருர். இன்னும் அவர் கூறியதாவது: தமிழ்ப்பேசும்மக்களின் பிள்ளைகள் தமிழ்மொழிமூலமே கல்வி பயிலுவார்கள். ஆனுல, அவர்கள் சிங்களத்தையும் ஒருபாடமாகப் படிக்க வேண்டுமென்று நான்கோருகிறேன். ஆங்கிலம் மூன்ரும்வகுப்புத்தொடக்கம் இரண்டாம்மொழியாகக் கற்பிக்கப்படும். தமிழ்மாணவருக்கும், சிங்கள மாணவருக்கும் ஆங்கிலம் இரண்டாம் மொழியாகும். ஆசிரியர்விஷயத்திலே நடந்தகாலத்தில் யூ. என். பி. அரசாங்கமும், முன்னைநாள் கல்விப்பகுதிஅதிபரும் பலநீதியீனங்களைச் செய்துள்ளனர். அவைகளை நான் கூடியவரையில் திருத்திவைப்பேன்.

### இம்மாதம் 15-ந்திகதிமுதல்

"சுயமரியாதையை எஞ்ஞான்றும் பேணிக்காக்கும் தமிழ்மக்கள் சிங்களம் படிப்பதினுல் உத்தியோகஉயர்ச்சி நிச்சயமாய்க்கிடைக்கும் சந்தர்ப்பத்திலும், நமது நாட்டின் இருதேசியமொழிகளுக்கும் சரிசமமான அந்தஸ்து வழங்கப்படும்வரைக்கும் சிங்களம் படிக்க முன்வரப்போவதில்லை என்பதை அதிகாரிகள் உணருங்காலம் கிட்டிவருகிறது; பல்வேறுமந்திரிமார் காரியாலயங்களும், 19அரசாங்கபகுதிகளும் இம்மாதம் 15-ந்திகதிதொடக்கம் கடிதப்போக்குவரத்து அலுவல்கள் அனைத்தையும் ஒன்றுக்கொன்று சிங்களத்தில் நடத்தவேண்டுமென்று பிரதமர் தெரிவித்திருக்கிருர்; இது திருப்திகரமானமுறையில் சாத்தியப்படுமென எதிர்பார்ப்பது பகற்கனுவாய் முடியுமென்பதற்குச் சந்தேகமில்லை"யென்று கோப்பாயிலே சென்ற 3-ந்திகதி நடந்தேறிய இளைஞர் மகாநாடொன்றில் திரு. வி. பாலசுப்பிரமணியம்அவர்கள் பேசியிருக்கிருர்.

### மத்தியான இலவசப்போசனம்

பாடசாலைகளிலே ஐந்தாம்வகுப்பிலும், அதற்கும் கீழ்ப்பட்டவகுப்புகளிலும் படிக்கும்பிள்ளைகளுக்கு வருகிற ஐப்பசிமாதம் 1-ந்திகதிதொடக்கம் இலவசபகற்போசனம் வழங்கப்படவிருக்கிறது. இந்தஇலவச பகற்போசனதிட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதுபற்றிய விபரங்களை அடக்கிய சுற்றறிக்கைஒன்று வித்தியாதிபதியால் பாடசாலைகளின் முகாமைக்காரருக்கெல்லாம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, ஐந்தாம்வகுப்பிலோ, அன்றேல் அதற்குக் கீழ்ப்பட்ட வகுப்பிலோ படிக்கும்ஓர் பிள்ளைக்கு நான்குசதம்பெறுமதியான ஒருபனிஷ்ம், ஒருஅவுன்ஸ் பால்மா கரைக்கப்பட்ட ஒருகிளாஸ்பாலும் கொடுக்கப்படும். இந்தப்பகற்போசனம் பெறுகிறபிள்ளைகளின் நாமங்கள் அடங்கிய ஓர்இடாப்பிலே அடைதப்பெறும் பிள்ளைகளின்பெயர்கள் தினந்தோறும் குறிக்கப்படவேண்டும். இத்திட்டத்தைநடத்த ஒருகோடிரூபா வருடம் ஒன்றுக்குச் செலவாகும். பால்மாவுடன் சீனிகொடுக்கப்படமாட்டாது.

### சந்நியாச தங்கயூபிலிவிழா

யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கலமாதாகோவில் கட்டளைக்குரவராய் ஓர் காலம் விளங்கியிருந்தவரும், தற்சமையம் 80 வயதுடைய விருத்தாப்பியராய் வளமிகுந்த தமதுசுவகாடாகிய பிரான்சிலே இளைப்பாறிவருகிறவருமான வண. எச். பெருசல்சுவாமியவர்களின் சந்நியாச தங்கயூபிலிவிழாவை அவரது பழைய விசாரணைப்பங்குமக்களாகிய அடைக்கலமாதாகோவில் கிறீஸ்துவர்கள் சென்ற ஆவணிமாதம் 25-திகதி சனிவாரமன்று பெரிதும் குதுகலத்துடன் கொண்டாடினுர்கள். யூபிலிநாயகரை நேரேதொடர்ந்து அக்கோவிலில் கட்டளைக்குரவராய் இருந்துவந்த வண. ஜே. எவ். சேவியர்சுவாமியவர்கள் அன்றுகாலை தேவதோத்திர பெரிய பாடற்பூசை நிறைவேற்றினுர். திவ்விய பூசையின்போது பாடகர்குழாம் திரு. யோசெவ்அன்ட்று அவர்கள்தலைமையில் இன்பகீதங்கள்பாடி அனைவரையும் பாவசமுறச்செய்தது. இற்றைக்கு 28வருடங்களின்முன்னே இவர் வண. பெருசல்சுவாமியவர்களாலேயே கின்னரவாத்தியகாராக நியமனம்பெற்றிருந்தார். பூசையின்பின் கோவிற் கிறீஸ்தவர்களின் சோபனவாழ்த்துகளைத் தெரிவித்து ஓர்தந்திச் செய்தி அனுப்பிவைக்கப்படலாயிற்று. அதனைத்தொடர்ந்து அவர்கள்பேரால் தற்சமையம் அக்கோவிற் கட்டளைக்குரவராய் இருந்துவருகிறவரான வண. எஸ். ஏ. சுவாம்பிள்ளைசுவாமியவர்களால் அன்பளிப்புகளும் அனுப்பிவைக்கப்படலாயின. அடைக்கலநாயகியின் மகத்துவமிக்க புதியஆலயத்தைக் கட்டிமுடித்தபெருமை வண. பெருசல்சுவாமிகளுக்கே உரியதாகும். அதனுல் அவரின் குன்ருதஞாபகம் தலைமுறை தலைமுறையாக அக்கோவில் கிறீஸ்துவர்களிடையே என்றைக்கும் நிலைத்திருப்பதாகும். அவர்மட்டிலே தங்களுக்குள்ள ஆழ்ந்தநன்றியையும், அன்பையும் பகிரங்கமாகத் தெரிவிக்குமுகமாக அடைக்கலமாதாகோவில்மக்கள் ஏற்கனவே அக்கோவில்மைதானத்திலே — பழையகோவில் பலிபீடஸ்தானம் இருந்தவிடத்திலே அலங்காரமும், மனவருட்சிக்குரியதுமான கல்வாரிக்குகை ஒன்றை அமைத்திருக்கிருர்கள்என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

—:—

### நான்காவது தண்ணீர்த்திட்டம்

மன்னாரிலே மூன்றாவது தண்ணீர்த்திட்டத்தின்கீழும் குழாய்நீர்உதவுவது பயனளிக்கவில்லை. அதனால் மன்னார்ப்பட்டினசங்கதலைவர் செய்துகொண்ட மனுவின்பேரிலே தலதாபன மந்திரியார் அப்பட்டினத்திற்குச் சிறந்தமுறையில் தண்ணீர்உதவும் நான்காவதுதிட்டம்ஒன்றை ஆரம்பிக்க ஏற்பாடுசெய்துள்ளார். இத்திட்டத்தின்கீழ் மன்னார்ப்பட்டினமக்களின் தண்ணீர்த்தேவை பூரணமாகப் பூர்த்திசெய்யப்படுமெனச் சங்கதலைவர் தெரிவித்திருக்கின்றார்.

### கிளிநொச்சியும் இரணைமடுக்குளமும்

நெடுநாள் மழைபெய்யாதகாரணமாகக் கிளிநொச்சியிலும், அதன் அயற்கிராமங்களிலுமுள்ள அநேகதென்னைகள், கமுகுகள் பட்டுப்போகின்றன. இரணைமடுக்குளத்தில் தண்ணீர்இல்லாமையால் சிறுபோகவேளாண்மையும் பட்டுப்போய்விட்டது. எருமைமாடுகள் இறந்துபடுகின்றன. ஏனையமிருகங்கள் தண்ணீர்தேடி அங்குமிங்குமாக அலைந்துதிரிகின்றன. கிணறுகள் பலவற்றிலே தண்ணீர்வற்றிப்போய் விட்டமையால் பலரும் நெடுந்தூரஞ்சென்று குடிப்பதற்குக் குடங்களிலே தண்ணீர் எடுத்துச் செல்லுகின்றார்கள். முரசுமோட்டை, ஆனையிறவுப்பகுதிகளுக்கு அரசாங்கம் லொறிகள்மூலம் தண்ணீர் உதவ வசதிசெய்திருக்கிறது.

### கல்லோயா நீர்த்தேக்கம்

கல்லோயாப் பள்ளத்தாக்குப்பகுதியிலே கடும்வரட்சிகாரணமாக நீர்த்தேக்கம் 60 அடிவரையிலே வற்றியிருக்கிறது. இருவாரங்களின்முன் அங்கு இரண்டொருநாள் மழைபெய்தபோதிலும், அதன்நீர்மட்டம் அதிகரிக்கவில்லை. பதுளை, பசறைப்பகுதிகளில் மழைபெய்தாலன்றி மற்றப்படி நீர்மட்டம்அதிகரிக்கமாட்டாதென்று சொல்லப்படுகிறது. அணைக்கட்டின் மட்டத்திலிருந்து சுமார் 10 அடிக்குக் கீழிருந்தநீர் இப்போது 60 அடிவரை வற்றிவிட்டது. அணைக்கட்டைச் சூழவரவிருக்கும் அழகியமலைப்பூந்தோட்டமும், பரிசோதனைப் பழச்செடித்தோட்டமும் மழையின்மையால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. காடுகளிலே நீர்நிலையங்கள் வற்றியகாரணமாக மாலைவேளையிலே யானைக்கூட்டங்கள் அணைக்கட்டுப்பகுதியை நாடிவருவதாகச் சொல்லப்படுகிறது.

### ஆசிரியரும் பாஷைப்பிரச்சினையும்

அகில-இலங்கை ஆசிரியர்கள்சங்கத்தின் 36-வது வருடாந்தபொதுக்கூட்டம் சென்றவியாழக்கிழமை கண்டியிலே திறினிற்றிக்கல்லூரி மண்டபத்தில் நடந்தேறியது. அதற்குத் திரு. டபிள்யு. டி. ஈ. பெரேரா அவர்கள் தலைமைவகித்தார். அதிலே "தற்போதைய மொழிக்கொள்கை காரணமாக ஐக்கியத்தைக்குலைக்கும் சிலசக்திகள் தேசிய ஒற்றுமையைப் பாழ்படுத்துவதைக் கண்டு அகில-இலங்கை ஆசிரியர்சங்கம் கவலைகொண்டுள்ளது; இந்நாட்டிலே எல்லாச்சாகிய மக்களினதும் அடிப்படைஉரிமைகளுக்கும், சுயமரியாதைக்குமேற்க அரசாங்கபாஷைப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்" என்றபிரேரணை நிறைவேறியுள்ளது. கூட்டத்திலே தலைவர்பேசியபோது: இலங்கையில் கல்வித்திருத்தம் மிக அவசியமாகச் செய்யப்படவேண்டும்; ஓர்கமத்தொழில்நாடான இலங்கையிலே கமத்தொழில், கைத்தொழில் ஆதியவற்றில் பயிற்சிபெறக்கூடியதாக மாணவர்கள் பயிற்றப்படவேண்டும்; இதுவிஷயமாய் இந்தியாவின்உதாரணத்தைப் பின்பற்றலாமெனக் கூறலாயினர்.

### தேநீர் காப்பிக்குப்பதிலாக

பரந்தன், கிளிநொச்சிப்பகுதிகளில் சிலர் தேநீர், காப்பிக்குப்பதிலாக அவ்விடங்களில் அதிகமாகக்காணப்படும் ஆவாசுமரத்தினது இலை, துளிர், காய், வேர், பட்டை முதலியவற்றைக் காயவைத்து இடித்துப் பொடிபண்ணி நன்னாரிக்கிழங்குடன் சேர்த்துக் கஷாயமாகக் குடித்துவருகின்றனராம். இம்முறையைக் கையாளுவதினால் நரம்புத்தளர்ச்சி, பலவீனம்முதலிய நோய்கள் அடியோடுமாறுமென்று பலர்கூறுகின்றனர். மேலும், இம்முறை பராசசேகரன்வாகடத்திலும் கூறப்பட்டுள்ளதென்றும், அதைப்பலகாலம் சுளிபுரத்தில் பெரியவைத்தியாயிருந்த வைத்தியர் சின்னத்தம்பிஅவர்கள் அனுட்டித்துவந்தாரென்றும் தெரியவருகிறது.

### மன்னாரும் உப்புவிளைவும்

முன்னர் மூடப்பட்டிருந்த மன்னார் உப்பளத்தைமறுபடி திறந்துவைக்கவேண்டுமென்று பொதுவாக மன்னார்வாசிகளும், சிறப்பாகக் கடற்தொழிலாளரும் செய்துகொண்ட வேண்டுகோளின்பேரிலே முன்னைநாள்சமூகசேவை மந்திரியாரான சேர்கந்தையாவைத்தியநாதன் அவர்கள் மீண்டும்சென்றதைமாதம் திறந்துவைத்ததின்விளைவாக உப்பளவேலைகள் தீவிரமாகநடைபெற்று முதன்முறையாக இப்போது 25,000 அந்தர்உப்பு விளைந்திருக்கிறது. இதில் 10,000 அந்தர்உப்பு உப்பளத்திலிருந்து வெளியேற்றப்பட்டுப் பொதுசனபாவனைக்கு வழங்கப்படலாயிற்று. இதுவரை பிறவிடங்களுக்கு மீன்கள் அனுப்பி வியாபாரம்நடத்திவந்த கடற்தொழிலாளர் உப்புப்பெறுவதில் இருந்துவந்தகஷ்டமும் இப்போதுநீங்கிவிட்டது.

### ஐக்கியமுன்னணிமுயற்சி

இலங்கைப் பாராளுமன்றத் தமிழ்ப்பிரதிநிதிகளிடையே ஒருஐக்கியமுன்னணியை ஏற்படுத்தப் பலநாள் பலர் முயற்சித்தும் கடைசியாக நடந்தகூட்டத்தில் அம்முயற்சிகள்யாவும் பயனற்றவையாயின. இந்தமுயற்சிகள் கைகூடாமற்போயினமைக்குப் பலரும்பலவிதகாரணங்களைக் கூறலாம். ஆனால், முக்கியமானகாரணம், குறித்தமுன்னணிக்காரியஸ்தரில்ஒருசாரார் "பாராளுமன்ற அங்கத்தவரல்லாதாரும் இந்த முன்னணிக்குழுவில் இருக்கலாம்என, வேறுசிலர் பாராளுமன்றஅங்கத்தவர்களே இக்குழுவாய் அமைதல்வேண்டும்" என்றனர். பிந்தியஅபிப்பிராயத்தை ஆதரித்துச் சமஷ்டிவாதிகள் பின்வரும் விளக்கங்கொடுத்தனர். "மொழிப்பிரசினை தமிழருக்கேற்படவிருக்கும் நோயின் அறிகுறியேஅன்றி நோயல்ல; மொழிப்பிரச்சினைக்குப் பரிகாரந்தேடினாலும் தமிழரின்நிலை மோசமாகவேமுடியும்; ஆகையால், மொழிப்பிரச்சினைக்கு அப்பால் வருங்காலநிலைக்கேற்ப உழைக்கவேண்டியது அவசியம்; அத்தகைய உழைப்புக்குஒத்த மனப்பான்மையுடையவர்கள் இருப்பதேஉசிதம்; பல்வேறு மனப்பான்மையுடையோர் கூடிப்பணியாற்றுவது கடினம்; அப்படி அவர்கள்வரின் உழைப்பின் உறுதி குன்றும்" என்றனர்.

## உன்னால் கூடுமானால்!

"உன்னால்கூடுமானால் தினந்தோறும்பூசைகாண்" என்று அர்ச். சாள்ஸ் பரோமியார் தமது ஞானமக்களுக்குச் சொல்லுவார். அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரும் அதேபிரகாரஞ் சொல்லுவார். தினந்தோறும்பூசைகாணுங்களென்று தம்மிடம் பாவசங்கீர்த்தனஞ் செய்யவரும் பச்சாத்தாபமுள்ள பக்களுக்கு அர்ச். பிலிப்பு கட்டளையிடுவார். சகலஅர்ச்சியசிட்டவர்களும் இதைத்தான் செய்துவந்தார்கள். கத்தோலிக்கநாடுகளிலே திரளானமக்கள் அனுதினமும் பூசைகாண்கிறார்கள். முழுவதும் கத்தோலிக்கநாடாகிய அயர்லாந்தில் மிகவும்குளிராயுள்ள கிராமங்களில் விடாமுயற்சியாய் ஏறக்குறைய ஒவ்வொருவரும் பூசைகாண்கிறார்கள். சால்போட்நகர் மேற்றிராணியாராயிருந்த வாண்ஆண்டவர் ஓர்முறை அங்கு போனபோது மலைகளின்மேல் இருக்கும் விஸ்தீரணமானகோயில் பொழுதுவிடியுமுன்னரே சனங்களால் நிறைந்திருப்பதைக்கண்டு இன்றைக்கு இங்கே என்னதிருநாள் கொண்டாடுகிறார்களென்று கேட்டார். அவர்கள்பிரமித்து, எல்லாச்சனங்களும் தினந்தோறும் வேலைஆரம்பிக்குமுன் பூசைகாண்கிறதுவழக்கமென்று அவருக்குச் சொன்னதுடன், அது சாதாரணநாளேயல்லாமல் திருநாள் அல்லஎன்றார்கள்.

விசுவாசம்பரந்துள்ள நாடுகளிலே மக்கள்அரைமணிநேரம்நித்திரையைக் குறைத்து விடியஎழுந்திருப்பதுபெருங்காரியமல்லவென்றுநினைப்பார்கள். தாங்கள்செய்யும்அநேகவேலைகளோடுஅரைமணிநேரம் பூசைகாண்பதையும் ஒருவேலையாக எண்ணுவார்கள். நமக்குள் எத்தனையோ ஆயிரம்பேர் பூசையின் மெய்யானபெறுமதியை அறியார்கள். அறிவார்களானால், தினந்தோறும் பூசைகாணக் கூடாவிட்டாலும் வாரத்தில் சிலதினங்களாகிலும் பூசைகாணுவார்கள். எத்தனையோ வழக்கறிஞர்களும், வர்த்தகர்களும், இன்னும் ஓயாமல் வேலைசெய்கிறவர்களும் தினந்தோறும் பூசைகாணும் வழக்கமுடையவர்கள். ஆனால், எத்தனையோபேர் இதைக் கவனிப்பதில்லை. இவர்களுக்கு மனமிருந்தால் தினந்தோறும் பூசைகாணலாம். ஆனால், இவர்கள் ஞாயிற்றுக்கிழமைதவிர மற்றநாட்களை நினைக்கிறதேயில்லை. நீ அடிக்கடி பூசைகண்டால் உன்மரணப்படுக்கை பாக்கியம்பெற்றதாயிராதா? தினந்தோறும் காண்கிற பூசையினின்று சுரக்கும்கிருபையால்உன்னைப் பலப்படுத்திக்கொண்டால் உன்காரியம் இந்த உலகசீவியத்தில் சரிவரநடவாதா? ஞானத்தில் உறுதிநிலையாய் நிற்கவும், நன்மரணம் அடையவும் வேண்டிய நிச்சயமான வழிகளைச் சம்பாதிப்பதற்குத் திவ்விய பூசை காண்பதைவிட மேலான வேறொருவழியும் கிடையாது. பூசையானது ஒருஅடைக்கலத்துறையென்று பக்தர்ஒருவர்கூறுகிறார். தாம் நாள் முழுவதும் படுங்கஷ்டத்தையும், மனச்சஞ்சலத்தையும், பலதொல்லைகளையும் இந்தஅரைமணிநேரத்தால் அவர் நீக்கிக்கொள்ளுவாராம். தமது காலைப்போசனத்தை மறந்தாலும் மறந்துவிடுவாராம். ஆனால், காலைப் பூசையைமாத்திரம் மறக்கமாட்டாராம்.

இங்கிலாந்தின் கத்தோலிக்கஅரசர்களில் றாபுஸ், ஜோண் என்பவர்களைத் தவிர மற்றஅரசர்கள்எல்லாம் தினந்தோறும் பூசைகண்டார்கள். 8-ம் என்றியும் சிறுவயதில் தினமும் இரண்டுமூன்றுபூசைகள் கண்டுவந்தார்.

தருமம்பகிரும் அர்ச். அருளப்பர் சரித்திரத்தில் எழுதியிருப்பதாவது: ஒரேபாடசாலையில்படித்த இரண்டு சிநேகிதர் வர்த்தகஞ்செய்து இருவரும் ஏறக்குறைய ஒரேதிட்டமான இலாபஞ் சம்பாதித்துவந்தார்கள். அவர்களில் ஒருவன் கலியாணஞ்செய்துகொண்டு அநேகபிள்ளைகளோடு தனது அண்ணன்பிள்ளைகளையும் காப்பாற்றவேண்டியிருந்தாலும் அவர்களுக்குத் தினந்தோறும் வேண்டியதைச் சவரட்சணை செய்தும், அவர்களுக்காக வங்கியில் பணம்போட்டும் வைத்திருந்தான். மற்றவனோ எக்காலத்திலும் நிர்ப்பாக்கியன். தனக்குவரும்லாபம்தனக்கே போதாதிருந்ததுமன்றி வருகிறதெல்லாம் பொல்லாங்காயுமிருந்தது. அவ்வாறாக ஒருநாள்அவன் தன்சிநேகிதனைக்கண்டு, நான்சாண்ஏறினால்முழஞ்சறுக்குகிறதுபோலத் தரித்திரத்திலேயே இருக்க, நீமாத்திரம் மண்ணைப்பிடித்தாலும் பொன்னாவதுபோல் செல்வமாயிருக்கிறாயே என்றான். அதற்குஅவன் நான் நாளையதினம்வந்து என் அனுகூல இரகசியத்தை உனக்குக்காண்பிக்கிறேன்என்றுசொல்லி, மறுநாள் காலைவந்து தன்னோடுகூடக் கோயிலுக்குவாவென்று அவனை அழைத்தான். இரண்டாம், மூன்றாம்நாளும் அப்படியேசெய்தான். அப்பொழுது அந்தஏழைச்சிநேகிதன்; ஆ! அநுதினம் பூசைகாண்பது என்நிர்ப்பாக்கியத்தை நீக்குமானால் நீ என்னைக் கூப்பிடவேண்டாம்; கோயிலுக்குப்போகிறவழி எனக்குத்தெரியும்என்றான். இதுதான் நான் உனக்குச் சொல்லுகிறது. இதுதான் எனதுஅனுகூலத்தின் இரகசியம். நான் பூசைகாணாமல் என்அலுவலுக்குப் போகிறதேயில்லை. "சர்வேசுரனுடைய இராச்சியத்தையும், அவருடையநீதியையும் முந்தத் தேடுங்கள். அப்போது உங்களுக்கு எல்லா நன்மையுங் கொடுக்கப்படும்" என்ற வேதவாக்கியம்சொல்லுகிற கட்டளையை நான்கண்டிப்பாய் அனுசரிக்கிறேன்என்றான். இந்தப்புத்திமதியை அந்தஏழைவர்த்தகன்கேட்டு அதேபிரகாரம் நடந்தான். கடவுள்தயவுவைத்துக் கண்திறந்து எப்போதுமில்லாத செல்வத்தை அவனுக்குவிரைவிலே ஆசீர்வதித்தார்.

இவையெல்லாம் பூசைகாண்பதினால் இந்தஉலகசீவியத்தில் வரும்பாக்கியமாயினும், இவ்வுலகில் அதற்குப் பலன் அடையாவிட்டாலும் நாவினால்சொல்லமுடியாத நித்தியஆசீர்வாதமே அதன் இயற்கையான பயன். இந்தப்பயனை மோட்சகீர்த்தியின் பிரகாசத்தினால் தியானிக்கிறவரைக்கும் நாம் காணமாட்டோம், உருசிக்கவும்மாட்டோம். நமது கண்முன்னே நமக்கு நன்மாதிரியாக அநேகம் உழைப்பாளிகளும், தொழிலாளிகளும் தினந்தோறும் பூசைக்குப்போவதைக் காண்கிறோம். இதனால் அவர்களெல்லாம் பயனடைந்தார்களன்றி நட்டப்பட்டார்களென்று கேள்விப்பட்டதில்லை. நமது சீவியகாலத்தில் தினந்தோறும் பூசைகாணக் கூடுமாயிருந்தும் நாம் இந்தவிலைமதிக்கப்படாத நன்மையைத் தள்ளிவிடுவது பைத்தியமாகும். ஆகவே, உன்னால் கூடுமானால் தினந்தோறும் பூசைகாண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### உலகசமாதான ஆலயம்

ஜப்பானிலே தொண்டாற்றி வருகின்ற ஜேர்மனிய யேசுசபை மிஷன் டீரிந்து கேட்டுக்கொண்ட தன்பேரிலே அணுக்குண்டுக்கு முதன்முதல்இரையான நகரமாகிய ஹிரோஷிமாவில் கட்டியெழுப்பப்படுகின்ற உலக சமாதான ஆலயத்துக்கு உதவிசெய்யப் பவேரியநாட்டு (ஜேர்மனி) கத்தோலிக்கமக்கள் முன் வந்துள்ளார்கள். அவ்வாலயத்திற்கெனப் பவேரியஅரசாங்கம் நற்கருணைக்கிருதியும், மூனிச்நகரம் பிரசங்கபீடமும், ஒபெறெம்மேர்க்கோநகரம் அறையுண்ட சிலுவையும் ஏற்கனவே அனுப்பி வைத்திருக்கின்றன.

### அர்ச். இஞ்ஞாசியாருக்கு ஞாபகம்

ஸ்பானிய தேச சோசோட்ரி குன்றின்உச்சியிலே அர்ச். லொயலா இஞ்ஞாசியாரின் ஞாபகார்த்த சின்னம்ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. அதிலே பிரமாண்டமான கற்பார்ஒன்று கப்பல்முகம்போன்று உருவாக்கப்பட்டு, அதன்மேல் அர்ச். இஞ்ஞாசியாரின் பெரிய திருச்சுரூபம் ஒன்று நிறுவிநிற்கும். பில்பாவோ நகரிலுள்ள மரியாயின்சபை ஒன்றே இதற்குரிய செலவைப் பொறுத்திருக்கின்றது. குன்றைச் சூழவரவுள்ள கிராமப்புறங்களில் வசிக்கின்றமக்கள் அங்குள்ள ஒரேயொரு ஏற்றுமதிச் சாதனமான எருதுகள்மூலம் ஏற்கனவே நூற்றுக்கணக்கான தொன் சாமான்களை அக்குன்றின் உச்சியிற் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறார்கள்.

### பாலியனைக்கவர்ந்த சீனக்குருவானவர்

அன்றொருநாள் நீண்ட அங்கி தரித்திருந்த சீனமனிதர் ஒருவர் வடபோணியோ தீவைச்சேர்ந்த புடாற்றன்நகருக்கு விஜயஞ்செய்திருந்தபோது அவர் அணிந்திருந்த நெட்டங்கியானது ஆறுவயதுப் பாலியன்ஒருவனின் கவனத்தை ஈர்ந்து, அவரை இன்னாரென்று ஆராய்ந்தறியும் அவாவை உண்டுபண்ணி விட்டது. அவர் ஓர்கத்தோலிக்க குருவானவரென்று அப்பாலியன் தனது சிநேகிதன் ஒருவன்மூலம் பிந்த அறிந்துகொண்டான். இது அவனுக்கு ஓர்வித அதிர்ச்சியை உண்டுபண்ணியது. ஏனெனில், கத்தோலிக்க குருமாரெல்லாம் ஐரோப்பியரே என்று அவன்எப்போதும் சொல்லக்கேட்டு வந்திருந்தான். ஆனுல், அவன் சிநேகிதன் உண்மையைத் தெரிவித்து அவனுடைய மன எண்ணத்தை மாற்றிவிடவே, எதனையும் ஆராய்ந்தறியும் குணமுள்ள அந்தப்பாலியன் அப்போதே தானும் ஓர்குருவாக வரவேண்டுமெனத் தீர்மானித்தான். தற்போது இவர்தான் வடபோணியோவிலே ஜெசெல்ற்றன் எனுமிடத்தில் சீனப்பிள்ளைகளுக்கென்று ஓர் பாடசாலையை ஸ்தாபித்து நடத்தி வருகின்ற வண. தோமஸ் சாம் சுவாமியார். இவரின் தந்தையரான திரு. சாம் அவர்கள் வைராக்கியமுள்ள ஓர் புரொட்டஸ்தாந்தர். கத்தோலிக்கமென்ற எதையுமே துவேஷித்து வந்தவர். ஆயின் ஒருநாள் அவர் ஓர் உபதேசியாரைச் சந்தித்தார். இருவருக்குமிடையே சமயவிஷயமாய் வாக்குவாதம் நிகழ்ந்து, ஈற்றிலே அவரது முழுக்குடும்பமும் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொண்டது. வண. தோமஸ் சாம் சுவாமியாருக்குப் பாலியவயதிலே அதிர்ச்சியை உண்டுபண்ணிவிட்ட அந்தச் சீனக்குரவரான வண. பீலிக்ஸ் ஷெக்சுவாமியார் இப்போது ஹொங்கோங்தீவின் விக்கார் ஜெனறலாய் இருந்து வருகிறார். ஜப்பானியர்கள் ஹொங்கோங் தீவை ஆக்கிரமித்திருந்த யுத்த கஷ்டகாலத்திலே வண. தோமஸ் சாம் சுவாமியார் அங்குதானே ஏழுவருடகாலம் தத்துவசாஸ்திரமும், வேதசாஸ்திரமும் படித்துக் குருப்பட்டம் பெற்றுக்கொண்டார்.

### சுதந்திர படையணிக் கடிதங்கள்

சீனக் கம்யூனிஸ்தர்களாலே முன்னர் சிறைவைக்கப்பட்டிருந்த வண. ஹறல்ட் றிக்றிசுவாமியாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள "சுதந்திர படையணி" யின் கேள்விக்கிசைந்து, ஜேர்மனியிலே சீய்ஜ்பேர்க் பகுதியில் வசிக்கின்ற ஐம்பதினுயிரம் பேருக்கு மேற்பட்ட தொழிலாளர்களும், கமக்காரரும் செஞ்சீனுவின் ஜனுதிபதியான மாலோ ரிஸி-ரங்என் பாருக்கு ஆகாயத்தபால் கடிதங்கள் அனுப்பிவைத்திருக்கிறார்கள். செஞ்சீனுவில் இன்னுமே சிறையில் இருந்துவருகின்ற கத்தோலிக்க மிஷனரிமாரையும், மற்றும் ஐக்கியஅமெரிக்கதேச கைதிகளையும் விடுதலைசெய்து விடும்படியாக இந்தக்கடிதங்கள் சீனத்தலைவரைக் கேட்டிருக்கின்றன.

### பாவசங்கீர்த்தன உடைபடாமுத்திரை

பாவசங்கீர்த்தன உடைபடா முத்திரை காரணமாக வாய்திறந்து பேசித் தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ளவியலாது தடுபட்டுப்போன ஓர் யூகோசிலேவிய குருவானவரும், அங்கே சொல்கான்எனும் கிராமத்தைச் சேர்ந்தவருமான வண. அன்ட்று சிம்சிக் சுவாமியார் "ஓர் பாவசங்கீர்த்தனத்தாலே தனதுகணவனை விவாகரத்துச் செய்துவிடும்படியாய் ஓர்மனுஷிக்கு ஆலோசனை கூறிய" தற்காக ஆறுமாதசிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றார். இன்னும் அவர் ஒருவருடகாலத்துக்குத் தமது குருத்துவ கடமைகளை நிறைவேற்றாது கம்யூனிஸ்தர்களால் தடுத்துவிடப்பட்டுமிருக்கின்றார். சொல்கான் என்ற இந்தக்கிராமமானது கம்யூனிஸ்தசட்டத்தை மீறினர்களென்று சொல்லிக் கடந்தசில மாதங்களிலே மற்றுமோர்தொகையான குருமார் குற்றஞ்சாட்டிச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டபகுதியின் ஓர்மத்தியதானமாகும்.

### போலி "வேதசாஸ்திர மாணவர்"

இது யூகோசிலேவிய கம்யூனிஸ்த உளவாளி ஒருவரைப் பற்றிய சம்பவம். இவர் ஓர் குருமடத்து வேதசாஸ்திர மாணவரைப் போல் மாறுவேடம் பூண்டிருந்தார். ஆனுல், தனது போலி வேடம் பகிரங்கமானதும் சட்டெனப்புறங்காட்டி ஓடவேண்டியவராயினுரென வீயென்னு நகரிலே செய்தி கிடைத்திருக்கிறது. ஓர் இளம்வாலிபனை இவர் குருமாணவரைப்போல் அங்கிதரித்து, சருஜிவோ நகரிலுள்ள ஓர்கத்தோலிக்க குருவானவரிடஞ்சென்றார். சென்றவர் தான்றோமாபுரியிலே வேதசாஸ்திரம்படித்துவருவதாகவும், யூகோசிலேவியாவிலே திருச்சபையின் நிலைமைகளை அறிந்துகொள்வதற்காக நாடுகடத்தப்பட்டவர்களாய் இத்தாலியில்இருந்துவருகின்ற யூகோசிலேவிய குருமாரால் தாம் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். அவரிடம் ஓர்மரியாதையாக வரவேற்பையும் பெற்றுக்கொண்டார். பிந்த அந்நகரிலுள்ள மற்றிருகுருமார் அங்கு வந்தனர். லத்தீன்பாஷையிலே சம்பாஷணை ஆரம்பமாயிற்று. அப்போது அந்தவாலிபர் யாதும் பேசவியலாது திருகத்திருக விழித்தார். தனக்கு லத்தீன் தெரியாதெனஅறிக்கையிட்டார். லத்தீன்எதுவும் தெரியாதிருக்கும்போது றோமாபுரியின் வேதசாஸ்திரகுருமடம்ஒன்றில் ஓர்மாணவனுக நீர் எவ்வாறு சேர்க்கப்பட்டிருக்க முடியும்? என்று பிரமிப்புடன் கேட்டனர். மற்றுஞ் சிலகேள்விகளுக்குப்பிறகு அந்த "வேதசாஸ்திரமாணவர்" ஓர் கம்யூனிஸ்த உளவாளிஎன்பது புலனுயிற்று. அவரும் நின்றவிடமும் தெரியாமல் வெளியேறிவிட்டார்.

### முன்னைநாள்விமானியும், பாதிரியாரும்

இங்கிலாந்திலே யோக் நகருக்குச் சமீபமான நியூட்ரன் - அன் -அவுஸ் எனுமிடத்தில் அங்கிளிக்கன்சபைப் பாதிரியாராயிருந்து வந்த கனம். நோர்மன் எட்வின் வாட் அவர்கள் மனந் திரும்பி அம்பிள்போர்த்திலுள்ள சந்நியாச ஆச்சிரமக் கோவிலிலே வண. வால்டோ ஜட்சுவாமியாரால் கத்தோலிக்க திருச்சபையில் சேர்க்கப் பெற்றிருக்கின்றார். இவர் சென்ற யுத்தத்திலே பிரித்தானிய ஆகாயப்படையில் ஓர்விமானியாகச் சேவைசெய்தவர். யுத்தத்தின் பின் லண்டன்நகரிலுள்ள கிங் கல்லூரியிலே வித்தியா பட்டமும், பின்னர் காலஞ்சென்ற அங்கிளிக்கன்சபை அதிமேற்றிராணியாரான கனம். கார்பெற் அவர்களால் யோக்நகரிலே அங்கிளிக்கன்சபைக் குருப்பட்டமும் பெற்றுக்கொண்டவர்.

### உயிருள்ள ஓர்பாழ்நரகம்

கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள செக்கோசிலவக்கியாவிலே சுவாடோனிற்ஸ் எனுமிடத்தில் "ஓர் உயிருள்ள பாழ்நரகம்" என அறியப்படுகின்றகூட்டடைமுகாம்ஒன்றில் ஏறக்குறைய 1,000 குருமாரும், புரொட்டஸ்தாந்த பாதிரிமாரும் அடைத்துவைக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து விடுதலையடைந்து திரும்பிய கைதிஒருவர் சார்பிறக்கென்நகரில் பிரசுரமாகும் "நியூவெஸ்ரே நாச்றிச்ரென்" எனும் சார்நாட்டின்கத்தோலிக்க தினவர்த்தமானிக்குத் தமதுஅனுபவங்களைப்பற்றித் தெரிவித்திருப்பது வருமாறு: "கம்யூனிஸ்த ஆட்சியாளர்கள் இந்தக் கைதிகளின் வாழ்க்கையைத் தங்களால் இயன்றமட்டும்நிர்ப்பாக்கியமானதாகச் செய்துகொண்டு வருகின்றார்கள். இந்தமுகாம் பழைய ஓர் நிலக்கரிச் சுரங்கத்தைச் சூழவர அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சுரங்கம் ஓர்யூறேனிய சேமிப்புத்தலமுமாகும். மிகவும்அடிப்படையான பாதுகாப்பு வழிவகைகள் தானும் அதில் இருப்பவர்க்குச் செய்யப்பட்டில்லை. அவர்கள் இரவும் பகலும் மாறிமாறிப் பெருங்கடுமையாக வேலை செய்யும்படியாக நெருக்கிப் பலவந்தஞ்செய்யப்பட்டு வருகிறார்கள். நிலத்தின் கீழ் சுமார் 2,600 அடி பதிவிலே பலமுறையும் 100 பாகைக்குமேற்பட்ட உஷ்ணநிலையிலே அவர்கள் வேலைசெய்கின்றார்கள். அச்சுரங்கத்தில் தண்ணீர்இல்லை. காற்றுவசதியில்லை. அணுச்சக்தி வீச்சால் அவர்கள் எப்போதுமே மரணஆபத்தில் இருந்து வருகிறார்கள். முகாமைச்சூழவர யந்திரப்பீரங்கிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. வயது சென்றவர்களும், நோய்வாய்ப்பட்டவர்களும் அபூர்வமாகவே வைத்தியசகாயம் அருளப்படுகின்றார்கள். "சண்டாளப் பாதகர்களே, நீங்கள்இங்குசாகத்தான் வந்திருக்கிறீர்கள்" என்று கம்யூனிஸ்த காவற்காரன்ஒருவன் அவர்களிடம் சமீபத்தில் கூறினுன். அவர்களுக்கு விடுமுறையே கிடையாது. ஞாயிற்றுக்கிழமைகளும் அங்கு சாதாரணவேலை நாட்கள்" என்பதே. இச்செய்தியை வெளியிட்டவர் அந்தப்பயங்கரமுகாமில் பத்து வருடகாலம் செலவிட்டிருக்கின்றார். தனது பெயரை அவர் வெளியிடவிரும்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாசி மாதம்

பரிசுத்த வியாகுலமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்.

**பொதுக்கருத்து:** தம்பதிகள் தாம்பத்திய பிரமாணிக்கத்தைப் பெரிதாகமதித்துச் சிராகஅனுசரிக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** வேதபோதக நாடுகளிலே வேதபோதக பிரசுரங்கள் தழைத்தோங்கும்படியாக மன்ருடிக்கொள்வது.


# சத்தியவேத பாதுகாவலன்

1956-ம் ஆண்டு
புரட்டாசிமாதம் 6-ந் திகதி


## கால மாற்றம்

"காலம் மாறிப்போச்சு" என்ற சுவரொட்டி விளம்பரங்களை இன்றுநாம் யாழ்ப்பாணமுழுவதிலும் கவனித்துவருகின்ருேம். இன்று எமதுநாடாகிய ஸ்ரீலங்காவிலும் நிகழ்கின்ற விபரீதசம்பவங்களையும் இந்தச்சுலோகம் நாம்சிந்திக்கும்படி செய்கின்றது. இதுகாலவரை ஒன்ருய்வாழ்ந்து, ஒருகலத்தில்உண்டு, சகோதரங்களைப்போல வாழ்ந்துவந்த சிங்கள, தமிழ்ச் சமூகங்களிடையே இன்று பெரும்பிளவு ஏற்பட்டுள்ளது. "சிறுபான்மையினருக்கு இன்னல்விளைக்கும்உத்தேசம் ஐக்கியமுன்னணி அரசாங்கத்துக்குக் கிடையாது" என்று ஆருக்காரியம் சொல்லிவந்த சிங்களஅரசியற்தலைவர்கள் காங்கேசன்துறைச் சிமெந்துத்தொழிற்சாலை சம்பந்தமாய், "தனிச்சிங்கள" சட்டத்தை நிறைவேற்றுமுகமாய் எடுத்திருக்கும் நடவடிக்கைகளும், பிறவும் தமிழ்மக்கள் இனிமேல் தங்களிற்தாங்களே தங்கியிருக்கவேண்டிய அவசியத்தைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. இந்தநிலைமையை நன்கு தெளிந்துகொண்ட தமிழ்பெரியாரும், அபிமானிகளும் தமிழ்மக்கள் வருங்காலத்தில் உய்யும்வழிகளை ஒன்றின்பின்ஒன்ருய் எடுத்துக்காட்டி அவர்களையெல்லாம் நன்குஉணர்த்திவருகின்ருர்கள். அவர்களிலே மற்றும்ஒருவர் கூறியிருக்கும் பொன்மதியை ஈண்டு தருகின்ருேம்.

"வடபகுதி மக்களாகிய நாம் இன்றுவரை சிங்கப்பூர்ப் பென்ஷன்பணத்தையும், கறுப்புப் புகையிலையையும், வெங்காயச் செய்கையையும் நம்பிவாழ்ந்தோம். ஆனால், இப்போது நிலைபரம்மாறிவிட்டது. மலையாளத்திற்கு அனுப்பப்பட்டுவந்த தின் புகையிலைத்தீர்வை 900ரூபாவாக ஏற்றப்பட்டுவிட்டது. இந்திய அரசாங்கம் இன்றுவரை இலங்கைப்புகையிலையை ஆதரித்துவந்தது. ஆனால், 1957-ம் ஆண்டு ஐப்பசிமாதத்துடன் புகையிலை ஏற்றுமதி கைவிடப்படவேண்டியதாகும். இப்போது வடஇலங்கை ஏற்றுமதிசெய்கின்ற தின் புகையிலைபோன்ற ஓர் இனப் புகையிலையைக் கோயம்புத்தூர் இந்தியாவுக்குஉதவிவருகிறது. ஆகவே, இனிமேல் குறைந்தஅளவில் ஏற்றுமதிபண்ணப்படும் இலங்கைப்புகையிலை முழுவதும் நிறுத்தப்பட்டுவிடும். ஆகவே, கஷ்டம்நெருங்கிவந்து வடஇலங்கையைப் பாதிக்குமுன்னரே நிலைமையைச் சமாளிக்கக்கூடியமுறையிலே புகையிலைசெய்வோராகிய நாம் நடந்துகொள்ளவேண்டும். கறுப்புப்புகையிலைக்குப்பதில் உலகமுழுதும் இன்றுஅதிகமாகத்தேவைப்படும் சிகறெற்புகையிலையை நாம்அபரிமிதமாகச்செய்கைபண்ணிப் பொருளாதார நெருக்கடி வடஇலங்கையைப் பீடிக்காதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

"இன்றையஅரசாங்கம் இவ்வருடமுடிவோடு வெங்காயத்திற்குஅளித்திருந்த உத்தரவாதவிலையை நிறுத்தப்போகின்றது. வடஇலங்கையில் இன்றுவெங்காயம் செய்கைபண்ணிநல்வாழ்வு நடத்தும் பலஏழைக்குடும்பங்களும், செல்வர்களும் இதனுல் பாதிக்கப்படுவர். இப்போது வெங்காயத்தின் உத்தரவாதவிலை அந்தர் 20 ரூபாவாகக்குறைக்கப்பட்டதையே சமாளிக்கமுடியவில்லை. இந்தஉத்தரவாதவிலை தொடர்ந்துநடைமுறையில்இருக்கும்படியாக அரசினரைத்தூண்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. ஆனுல், எப்போதும் இந்தஉத்தரவாதவிலை இருக்குமென்றுநம்பி ஏமாந்து மோசம்போகவேண்டாம். ஆகவே, இந்தியாவுக்குப் புகையிலை ஏற்றுமதிசெய்யமுடியாது தத்தளிக்கும்போது வெங்காயஉத்தரவாதவிலையும் அரசினராலே கைவிடப்படின் அப்போது நிலைமையை நாம்சமாளிக்க வேண்டும். அன்றியும் இப்போதைய உத்தரவாதவிலையும் சதாதொடர்ந்து இருந்துவரும் என்பதற்கும் என்னஉத்தரவாதம்? ஆகவே, இவற்றை நன்கு அலசிஉணர்ந்து கூட்டுறவிலும், சகிப்புத்தன்மையிலும், விடாமுயற்சியிலும், யூகத்திலும்கீர்த்தி பெற்ற வடஇலங்கைமக்கள் சிறந்தபுகையிலையை அபரிமிதமாக உற்பத்திபண்ணவேண்டும்.

"வாலிபர்கள் இனிமேலும் உத்தியோகத்தைநாடி வீண்பொழுதுபோக்காமல் கமமுயற்சியில் ஈடுபடவேண்டும். நவீன முறைகளைக் கூட்டுறவுமுறையில் கைக்கொண்டு உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கவேண்டும். "கூட்டுறவே சிறந்தஇலட்சியம்—உற்பத்தியே முக்கியஅரசியல்" என்றுநம்பிக் கட்சி, சாதி, அரசியற் சண்டையைமறந்து கூட்டுறவுஅடிப்படையில் கமத்தொழிலில்ஈடுபட்டு வரண்டபிரதேசத்தை முயற்சியால் செல்வம் கொழிக்கும் நாடாக்கிப் பொருளாதாரசுபீட்சமும், சிறந்தவாழ்வும்அடையவேண்டும்."

---

## கன்னியர் திலகம் கண்டுகளித்த வைரயூபிலி

ஆவணிமதி ஏழ்நாலாந்தினம் எழிலுடன்புலர்ந்தது. எட்டுமணியானதும் ஆலயமணிகள் ஆர்ப்பரிக்கின்றன. மோனத்திரையில் மூழ்கிக் கிடக்கும் போளவளானுக் கன்னியர் மடத்தில் என்றுமேயில்லாத ஆனந்தக்குமுறல். நல்லாயர் கன்னிகாசபையின் வெண்ணுடைதரித்துக் கன்னியர்கள்புடைசூழத் தமதுகன்னிகாபதவியின் அறுபதாம்வருட வைரயூபிலியைக்கொண்டாட எழுந்தருளுகின்ருர் சங். மேரி ஒப் சென்சொலான்ஸ் தாயார். கொழும்பு அதிமேற்றிராணியாராகிய மகாமேன்மை தங்கிய தோமஸ் குறே ஆண்டவர் அவர்கள் குருப்பிரசாதிகள் நாற்பதின்மருடன் யூபிலிநாயகியை வரவேற்று நல்லாசீர் நல்கிநிற்க, அவர் தமக்கெனச் சித்தஞ்செய்யப்பட்டிருந்த தனிஆசனத்தில் முழந்தாட்படியிடுகின்ருர். லீலிப்புஷ்பங்களால் சிங்காரிக்கப்பெற்றுத் தேசோமயமாய்விளங்கிய பலிபீடத்தில் ஆராதனை தொடங்குகின்றது. தேனினுமினிய ஞானகீதங்கள் உள்ளங்களைப் பரவசப்படுத்துகின்றன.

குரவர்கள்அறுவர் உதவிபுரிய அதிமேற்றிராணியார் பெரியபாடற்பூசையை நிறைவேற்றுகின்ருர். முடிவில் ஓர்அரியபிரசங்கம் அனைவரையும் ஆனந்த பிரவாகத்துள் ஆழ்த்துகின்றது. அதிமேற்றிராசன பாடசாலைகளின் முன்னைநாள் பிரதமமனேஜர் வண. டீ. ஜே. அன்ரனிசுவாமியவர்கள் சங். தாயாரின் சீரியகுணங்களையும், சீரிலங்கையிலே சிறப்புடன் அவர்ஆற்றிவந்துள்ள செப்பருஞ் சேவைகளையும் சித்திரித்துக்காட்டி நல்லாயர்சபைக்கோர் நன்றித்துதியும் சாற்றுகின்ருர். பின்னர் பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதபாப்பரசர் சொலான்ஸ்தாயாருக்கு அனுப்பிய ஆசீர்வாதப்பத்திரத்தையும் படித்துக்காட்டுகின்ருர்.

அதன்மேல் தாயார்அவர்கள் தமது கன்னிகா வார்த்தைப்பாட்டைப் புதுப்பிக்கவே அதிமேற்றிராணியாண்டவர் தாயார்க்கு ஆசிமொழி கூறி, வெண்ருேசா மலர்முடியொன்றைச் சிரமிசைபுனையத் "தெதேயும்" என்றதேவதோத்திரகீர்த்தனம் அனைவரதும் நன்றித்துதிகளையும் தேவபதஞ்சேர்த்தது. ஈற்றில் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டு, யூபிலிவிழாவைபவம் சமாப்தியாயிற்று.

சங். மேரி ஒப் சென்சொலான்ஸ் தாயார் புகழுறும் பெல்ஜியதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆஞ்சேநகரில் நல்லாயர்சபைக் கன்னிகாஉடைதரித்து, ஈர்பத்துவயதினுள் துறவறவார்த்தைப்பாடுகொடுத்துப் பன்னீராண்டுகளாய் அனுதபிள்ளைகளைப்பராமரிக்கும் அரும்பணியாற்றினுர். தாழ்மையின்பலன் அவரைத் தலைமைப்பதவிக்கு உயர்த்தியது.

தம்நாடுதுறந்து சாகரங்கடந்து, இலங்கைசெய் நற்றவத்தால் இங்குற்ற இக்கன்னிகாரத்தினம் அர்ச். பிரான்சிஸ்சவேரியார்போல் ஸ்தாபகமாயிருந்த சுதேசக்கன்னியர்சபையின் சிரேஷ்டராயினுர். 1909-ம் ஆண்டு சித்திரைமாசம் 9-ம்நாள் சொலான்ஸ் தாயார் கொழும்புற்றபோது இங்கிருந்த சவேரியார்சபைக் கன்னியர் மடங்கள் 2, கன்னியர்கள்தொகை 75, பாடசாலைகள் 22. ஆனுல், இவரின்அயராஉழைப்பும், ஆன்மஈடேற்ற வாஞ்சையும், அயலவர் அன்பும், ஈகைப்பண்பும், "இறைவன் திருச்சித்தமே, ஏழைஎன்பாக்கியம்" என்ற மனப்பான்மையும் இச்சபையை விருத்தியுறச்செய்தன.

இன்று அர்ச். பிரான்சிஸ்சவேரியார்சபைக் கன்னியர்களின் எண்ணிக்கை 436. மடங்கள் 55. பாடசாலைகள் 62. அனுதைப்பிள்ளைகள்மடம் 2. வயோதிபர்சாலை 1.

ஏறக்குறைய மேல்மாகாணம்முழுவதிலும் கத்தோலிக்கபாலிகைகளைப் பயிற்றித் திருத்தொண்டாற்றி அரும்பணிபுரிகின்றனர். சிங்களம், தமிழ், ஆங்கிலம்ஆகிய முப்பாஷைகளிலும் கல்விபயிற்றுவதுமன்றித் தையல், நெசவு, சங்கீதம், கைத்தொழில், வியாதிஸ்தரைப்பராமரித்தல்போன்ற தொண்டுகளிலும் ஈடுபட்டுள்ளனர். கொழும்புஅதிமேற்றிராசனத்தில் உத்தமதொண்டாற்றிவரும் இச்சுதேசகன்னியரை 47 ஆண்டுகளாக வழிநடாத்திவரும் சங். மேரி ஒப் சென்சொலான்ஸ் தாயார் பரமன் தொண்டில் பழம்பறித்துச் சுவைகண்ட பெருமைபூண்ட புனிதவதியென்பதில் ஐயமின்று.

— நிருபர்

---

● திரு. எணெஸ்ற் ஹெமிங்வே என்றபிரபல நூலாசிரியர் எழுதிய "கிழவனும், சமுத்திரமும்" என்ற நாவலுக்கு நோபெல்பரிசு அளிக்கப்படலாயிற்று. அவர் இந்தப்பரிசுக்குரிய பதக்கத்தைக் கியூபா தீவிலே கோபர்நகரில் இருந்துவருகின்ற "பிறர்சிநேக மாதா"வின் பிரபல சேத்திரத்துக்கு அன்பளிப்புச் செய்திருக்கின்ருர். "பிறர் சிநேகமாதா" தான் கியூபாவின் பாதுகாவலாளியாவர்.

● கீழ்த்திசையின் ஒரேயொருகத்தோலிக்க நாடாகிய பிலிப்பைன்ஸ் தீவின் தலைப்பட்டணமாகிய மனிலா நகரிலே வருகிற கார்த்திகைமாதம் 28-ந்திகதிமுதல் மார்கழி 2-ந்திகதிவரையில் நடந்தேறவிருக்கின்ற தேசிய சற்பிரசாதமகாநாட்டுக்குப் பாப்பரசரின் பிரதிநிதியாக நியூயோக்நகர் அதிமேற்றிராணியாரான கருதினுல்ஸ்பெல்மன் ஆண்டவர் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்ருர்.

● இந்தியாவிலே சௌராஷ்டிராவில் பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், மகாராஷ்டிராவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் கஷ்டநிவாரணமாக ஐக்கியஅமெரிக்க தேசியகத்தோலிக்க சேமவாழ்வுச்சங்கம் 15,000 மூடை அரிசி அனுப்பிவைத்திருக்கிறது. இது பம்பாய்அதிமேற்றிராணியாரான கருதினுல் கிருசியாஸ் ஆண்டவராலே பம்பாய் அரசாங்க மந்திரிமாருள் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தூய கன்னிமை" என்னும் 12-ம் பத்திநாத பாப்பரசரது பொதுநிருபம்

(முன்தொடர்ச்சி)

இன்னும், தேவசேவைக்கு அழைக்கப்படும் தங்கள் பிள்ளைகளை நன்மனதோடு ஒப்புக்கொடுக்கும்படி தாய் தந்தையரை எமது அப்போஸ்தொலிக்க பதவியின் கடமைப்படி வற்புறுத்துகின்றோம். அவர்கள் அப்படிச் செய்வதின்பயனைத் துன்பதுயரங்களை அனுபவிக்க நேரிடின், மிலான் நகரத்துத் தாய்மாருக்கு அர்ச். அமிர்தநாதர் கூறிய புத்திமதிகளை அவர்கள் கவனமாய்த் தியானிப்பார்களாக. "கன்னியர்களாய் இருக்கவேண்டுமென்று நான் விரும்பிய இளம்பெண்களிற் பெரும்பாலார் தங்கள் தாய்மாரால் தடுக்கப்பட்டனர்........உங்கள் புத்திரிகள் ஒருவரைக் காதலிக்க விரும்பினல், விரும்பியவரைத் தெரிந்துகொள்ளத் தேசசட்டம் அவர்களுக்கு இடம்கொடுக்கின்றது. ஒருமனிதனைத் தெரிந்துகொள்ள அவர்களுக்குச் சுயாதீனம் உண்டாயின் தேவனைத் தெரிந்துகொள்ள அவர்களுக்குச் சுயாதீனம் இல்லையா?" (De Virginibus I, c. 10, n. 58).

தங்கள் புத்திரன் குருத்துவ பதவிக்கு உயர்த்தப்படுவதை அல்லது தங்கள்புத்திரி தனது கன்னிமையைத் திவ்வியபத்தாவுக்கு அர்ப்பணம் செய்வதைக் காணுதல் எவ்வளவு மேலான மகிமையென்று பெற்றோர் உணர்வார்களாக. சருவேசுரனுக்குத் தம்மை அர்ப்பணம்செய்த கன்னியர்களைக் குறித்து மிலான்நகரத்து மேற்றிராணியாரான அர்ச். அமிர்தநாதர் பின்வருமாறு கூறுகின்றார். "பெற்றோரே, ஒரு கன்னிகையானவள் தேவனின் கொடையென்றும், பெற்றோரின் காணிக்கையென்றும், கற்பின் குருப்பதவியென்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். கன்னிகையானவள் ஒரு தாயின் பலிப்பொருள்; இவ்வனுதின பலியினல் தேவகோபம் தணிக்கப்படுகிறது" (De Virginibus I, c. 7, n. 32).

### 6. வேதகலாபனையில் அகப்பட்டிருக்கும் குருமாரும் சந்நியாசிகளும்

வந்தனைக்குரிய சகோதரரே! இப்பொது நிருபத்தை முடிக்குமுன் தேவசேவைக்குத் தம்மை அர்ப்பணம் செய்ததின்நிமித்தம் பற்பல நாடுகளில் கொடிய வேதகலாபனையில் அகப்பட்டுவருந்தும் ஆண் பெண் அனைவர்பக்கமாய் எமது மனதையும், இருதயத்தையும் விசேஷவிதமாய்த் திருப்ப விரும்புகிறோம். தங்கள் கன்னிமைக்காக அஞ்சாநெஞ்சோடும், ஓர்மத்தோடும் தங்கள் உயிரைத் தியாகம்செய்த ஆதித்திருச்சபையின் துறவறகன்னியரது முன்மாதிரிகையை இவர்கள் பின்பற்றுவார்களாக!

கிறிஸ்துநாதருக்கு ஊழியம்செய்ய வாக்களித்த யாவரும், "மரணபரியந்தம்" (பிலமன், 2, 8) அவ்வூழியத்தில் தயங்காது நிலைத்து நிற்பார்களாக! தங்கள் துன்பதுரிதங்களும், செபங்களும் சருவேசுரனுடைய இராச்சியத்தைத் தங்கள் சொந்த நாடுகளில் புதுப்பித்தற்கும், முழுத்திருச்சபைக்கும் தேவசந்நிதானத்தில் மிகவும்வலிமையுள்ளவையென்று அவர்கள் உணருவார்களாக! "செம்மறிப்புருவையானவர் போகும் இடந்தோறும் அவரைப்பின்செல்லுகிறவர்கள்" (காட்சி: 14, 4) வேறெவரும் பாட இயலாத "புதுப்பாட்டை" (காட்சி. 14, 3) பாடுவார்கள்என்ற நம்பிக்கையுடன் இருப்பார்களாக!

தங்கள் உயிரையும் அர்ப்பணம்செய்து விசுவாசத்திற்கு ஓர்மத்துடன் சாட்சியம் அளிக்கும் குருமாரோடும், சந்நியாச ஆடவர் பெண்டிரோடும் நாமும் பிதாவுக்குரிய அன்போடு அனுதாபப்படுகிறோம். இவர்களையும், உலகத்தின் எத்திசையிலும் தம்மைத் தேவசேவைக்கு முற்றாகக் கையளித்து வாழும்யாவரையும், சருவேசுரன் பாதுகாத்து உறுதிப்படுத்தி ஆதரிக்கவேண்டுமென்று அவரிடம் இரந்து மன்றாடுகின்றோம். வந்தனைக்குரிய சகோதரரே! நீங்கள் ஒவ்வொருவரும், உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட விசுவாசிகளும் அன்னருக்கு அவசியமான ஆறுதல்களையும், வரங்களையும், அருள்களையும் தேவனிடம் நம்மோடு கூட இரந்து மன்றாடும்படி உங்களைக்கேட்டுக் கொள்ளுகின்றோம்.

### முடிவுரை

வந்தனைக்குரிய சகோதரரே! உங்கள் ஒவ்வொருவருக்கும், சகல குருமார் துறவறகன்னியர்—விசேஷமாய் "நீதியின் நிமித்தம் உபத்திரவப்படுவோர்" (மத். 5, 10) ஆதியோருக்கும், உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட விசுவாசிகள் அனைவருக்கும் நாம் மனமுவந்து அளிக்கும் அப்போஸ்தொலிக்க ஆசீர்வாதம் பரலோக அருளின் அடையாளமாகவும், எமது பிதாவுக்குரிய அன்பின் அடைமானமாகவும் இருப்பதாக.

இப்பொது நிருபமானது எமது ஆளுகையின் 16-ம் வருடமாகிய 1954-ம் ஆண்டு பரிசுத்த கன்னி மரியம்மாள் மங்களங்கேட்ட திருநாளாகிய பங்குனிமாதம் 25-ந் திகதியன்று ரோமாபுரியில் அர்ச். இராயப்பரின் மகாலயத்தில் விடுக்கப்பட்டது.

இங்ஙனம்,

**12-ம் பத்திநாத பாப்பானவர்.**

---

# லூசிப்பேரின் சுயகுணம்

பின்வரும்சம்பவம் பிசாசு உருக்கொண்ட ஒருவனலே சொல்லப்பட்டதாக "La Verite" என்னும் பிரான்சியபத்திரிகை ஒன்றில் அப்போது வெளிவராயிற்று. பின்னர் ஜோண் கொஸ்கா என்பவர் எழுதிய "லூசிப்பேரின் சுயகுணம் வெளியாகுதல்" என்னும் பெரிய புத்தகத்தில் சேர்க்கப்பெற்றுள்ளது. இது உண்மைச் சம்பவமென்று கருதினல் பரோக்கியா ஆண்டவரும் சாட்சியிட்டிருப்பதாக "L'ami du Clerge" என்னும் பிரான்சிய வாரப்பத்திரிகை ஒன்றிலே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. லூசிப்பேர் சொல்லியது வருமாறு:

"நான் உலகம்முழுவதையும் அழிவுசங்காரங்களினலும், இரத்தப் பிரவாகங்களினலும், கண்ணீர்களினலும் நிரப்பிக்கொண்டு வருகின்றேன். அலங்காரமுள்ளனவற்றை அவலட்சணப்படுத்தி, சுத்தமானவற்றை அசுத்தப்படுத்தி, மேன்மையானவற்றை அறம்புறமாக்கி என்னற்செய்யக்கூடிய தீமைகள் எல்லாவற்றையும் செய்துகொண்டு வருகின்றேன். அத்தீமைகளை அளவுகணக்கில்லாத பக்குவத்துக்குக் கொண்டுவந்துவிட ஆவலாயிருக்கின்றேன். பகைசாதிப்பதே, முற்றாகப் பகைசாதிப்பதே எனது சுபாவம், என் சுயகுணம். அது வன்றிவேறென்றல்லஎனலாம். பகைசாதிக்கும் எனது இக்குணத்தின் ஆழத்தை, நீளத்தை, அகலத்தை நீ அளவிட்டு அறிந்துகொள்ளக் கூடுமென்றல் சிருட்டிக்கப்பட்ட அறிவுள்ள வஸ்துக்களுள் எல்லாம் மேலான வஸ்துவாயிருப்பாய். அம்மட்டா? இந்தச் சிருட்டிகளின் அறிவெல்லாம் ஒருமிக்கத் திரண்டு தன்னிடமாயுள்ள ஒரு வஸ்துவினும் மேலான அறிவுள்ள வஸ்துவாயிருப்பாய்.

எவ்வளவாக நான்பகைக்கிறேனே அவ்வளவாகவே வேதனையும் அனுபவிக்கிறேன். எனது பகையும், வேதனையும் என்னைப்போல அழிவில்லாதவைகள். எப்போதுமே நான் உயிருடன் இருக்கவேண்டியது போல, எப்போதுமே பகைசாதிக்க வேண்டியவனகவுமிருக்கிறேன். எனது வேதனையை அதிகரிக்கச்செய்வதும், பகையைப் பெருகச்செய்வதும் என்னவென்று அறியவிரும்புகின்றாயா? சொல்லுகிறேன் கேள்.

நான் வெற்றிகொள்ளப்பட்டு அடிப்படுத்தப்பட்டேனே, வியர்த்தமாய் எல்லாரையும் பகைக்கிறேனே, வீணைகத் தின்மையெல்லாவற்றையும் செய்துகொண்டு வருகிறேனே என்பதுதான். என்ன! வீணகவா? இல்லை, இல்லை. இப்படிச்செய்வதிலும் எனக்குச் சந்தோஷமுண்டு. இதையும் ஒரு சந்தோஷமென்று சொல்லக்கூடுமோவென்றல், இதுவே எனக்குள்ள ஒரேயொரு சந்தோஷம். கிறீஸ்துநாதரால் ஈடேற்றப்பட்ட ஆத்துமாக்களைக் கொலைசெய்கிறது சந்தோஷம். இவர்களுக்காகவல்லவோ அவர் இரத்தஞ்சிந்தினர். இவர்களுக்காகவல்லவோ உயிரைவிட்டார். உயிர்த்துப் பரலோகஞ்சென்றார்.

ஆமாம், நான் அவருடைய மனுஷஅவதாரத்தை—மரணத்தை—ஒருதேவனுடையமரணத்தை வீணக்குகின்றேன். நான் கொல்லுகின்ற ஆத்துமங்களுக்கெல்லாம் அவைகள் பிரயோசனமற்றவையாகும்படி செய்கிறேன். இவைகளெல்லாம் என்னவென்று உனக்கு விளங்குகின்றதா? ஒரு ஆத்துமத்தைக் கொலைசெய்வதென்றல என்னவென்று கண்டுபிடித்துக் கொள்ளுகின்றாயா? அந்த ஆத்துமத்தை அவர் தமதுசாயலாகச் சிருட்டித்தாரே, தமது ரூபமாக உண்டுபண்ணிவிட்டாரே, அதை அளவில்லாதநேசத்தோடு நேசித்தாரே, அதற்காகச் சிலுவையிலே அறையுண்டு மரித்தாரே. அந்த ஆத்துமத்தை நான் அவரிடமிருந்து பறிக்கிறேன். அவரிடமிருந்து கொள்ளையாடுகிறேன். அதைப் பாதகமாய்க் கொலைசெய்கிறேன். என்னுடன் அதையும் நித்தியகேட்டுக் குள்ளாக்குகிறேன். நானே இந்தஆத்துமத்தை நேசிப்பதேயில்லை. இனிமேலில்லையென்ற வன்மத்துடன் அதைப் பகைக்கிறேன். பகைத்து நித்தியசாபத்துக்குள்ளாக்குகிறேன். இந்த ஆத்துமம் அவரைப் புறக்கணித்து அகற்றிவிட்டு என்னையே தெரிந்துகொண்டது. ஆயினும் நானே அதற்காகப் பா

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதை மக்களுக்குச் சொல்

— Rev. Fr. S. L. Gabriel —

மனிதன் கங்கணம்கட்டிக்கொண்டு கடவுளின் உரிமைகளை அபகரிக்க முயற்சிக்கிறுன். ஆதாம் எதிர்த்தார், பூங்காவனத்திலிருந்து துரத்தப்பட்டார். காயீன் தன்தம்பி ஆபேலைக் கொன்றுன், நாடுகடத்தப்பட்டான். ஆதிமுதல் மனிதர் கடவுளின் ஆதிக்கத்தை எதிர்த்தனர். கடவுள் பொறுமையாயிருந்தார். ஆனுல், காலம்வந்தபொழுது கடுமையாகத் தண்டித்தார். மனிதர் துன்பப்பட்டு, தாழ்த்தப்பட்டு இறுதியில் இறைவனிடமாக மனந்திரும்பினர்.

பஞ்சம், படை, பிணி, சாவு எல்லாம் மனிதனின்பாவத்திற்கு வந்த தண்டனை. பேரழிவு செய்தபோர்கள் இந்தநூற்ருண்டிற்தான் நடந்தன. தமது பரிசுத்ததாயின் வழியாகக் கடவுள் பலமுறை உலகத்திற்கு எச்சரிக்கை கொடுத்தார். ஆனுல், அவருடைய பயமுறுத்தல்கள் பயனற்றுப்போயின. முதலாவது உலகப்போர் வந்தது. மனிதர்கள் களைத்து, மனந்தளர்ந்து இன்னெருசண்டை வேண்டாமென்று நேர்ந்துகொண்டனர். ஆனுல், சர்வதேசசங்கமோ, உலகநீதிமன்றமோ, வரவிருக்கும் பெரியசேதத்தைத் தடுக்கமுடியாதென்று மரியன்னை நமக்கு எச்சரிக்கைசெய்திருந்தாள். செபமும், தபமுமே மனுக்குலத்தின் துன்ப துயரங்களைத் தீர்க்கும் என்றுள். அவளுடையபோதனை மதிக்கப்படவில்லை. இரண்டாவது உலகப்போர் முன்சொன்னதுபோல் வந்தது. அதனுல் ஏற்பட்டசேதம் இன்னும் நிவிர்த்தியாகவில்லை. நாஸ்திகம் இன்னும் நாசவேலை செய்கிறது. ஒருவேளை உலகமுழுவதும் அழிந்துபோகாதபடி மரியன்னை மக்களிடம் பரிந்துபேசுகிறுள்.

உள்ளம்உடைந்த உலகத்திற்கு இதுதான் பொதுவுடைமையின் காலம். ஆனுல், நமக்கோ இது மரியன்னையின்காலம். கடவுளுக்கும், பிசாசுக்கும் நடக்கின்ற நித்தியபோர் இப்பொழுது மரியாளுக்கும், பொதுவுடைமைக்கும்நடைபெறும் மரண அவஸ்தையாக இருக்கிறது. சாத்தானின் சகாக்களைச் சாகடிக்கத் தெய்வபக்தியுள்ள ஆண்பெண் மக்கள்அனைவரையும் தேவமாதா தம்முடைய போரணியிற் சேர்ப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இதேகாரணத்திற்காகச் சலேத், லூர்து, பாத்திமா போன்ற ஊர்களில் காட்சியளித்தாள். அத்தனை காட்சிகளின் போதனைகளையும் ஒருவாக்கியத்தில் அடக்கலாம். செபமும், தபமுந்தான் கடவுளுடைய கோபதண்டனைகளைத் தடுக்கமுடியும்.

கத்தறீன் லபோர் கன்னியாஸ்திரிக்குக் கி. பி. 1830-ம் ஆண்டு மாதாகொடுத்த தரிசனந்தான் இந்தநூறுஆண்டுகளில் முதல்முறையாகும். அப்பொழுது யேசுவின் திருஇருதயப் பக்தியையும், மரியாயின் மாசற்றஇருதயப் பக்தியையும் தூண்டினுள். இது தெய்வத்தன்மை வாய்ந்ததுஎன்பதற்கு அறிகுறியாகக் கத்தறீனுக்கு அற்புத சுரூபத்தைக் கொடுத்தாள். ஆனுல், உலகம் ஆண்டவனை அறியவில்லை. நீடிய துன்பமும், கலாபனையும் பிரான்ஸ்தேசத்தை வாட்டியது.

**சலேத்மலை:** 1846-ம் ஆண்டிலே மாக்ஸிமின், மெலானி மத்தேயு என்னும் இருசிறுவர்களுக்குச் சலேத் ஊரிலே மாதாதரிசனமானுள். கடவுளின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய மனிதர் மறுத்துவிட்டதாக முறையிட்டாள். "ஏழுவயதிற்குட்பட்ட குழந்தைகள்எல்லோரும் சாவார்கள்; ஒருபெரிய பஞ்சம்பரவும்." இந்த முறைப்பாட்டிற்கும் காது கொடுக்கப்படவில்லை. பஞ்சத்தினுல் பத்துலட்சம்பேர் உயிர்துறந்தனர். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் பொதுவுடைமைபிறந்தது. காள் மாக்ஸும், எங்கெனும் தங்கள்நாஸ்திககொள்கைகளைப் புத்தகவடிவில் வெளியிட்டனர்.

**லூர்துகெபி:** 1858-ம் ஆண்டு லூர்துகெபியிலே தேவமாதா அமல உற்பவியாகக் காட்சியளித்தாள். இதனுல் உலகமே புத்துயிர்பெறும் என்று நம்பினுள். பாவிகளுக்காகச் செபம்செய்யுங்கள், செபம்செய்யுங்கள் என்று பரிந்துபேசினுள். உலகத்திற்கு இரக்கமும், அருளும் கொடுக்கச் செபமாலையே சிறந்த செபமென்றும் காட்டினுள். இதற்கும் உலகம் கவலையெடுத்து ஆவன செய்யத் துரிதப்படவில்லை. சண்டைகளும், சச்சரவுகளும் வளர்ந்து இறுதியில் பெரிய உலகப்போரில் கொண்டுவந்துவிட்டன. கோடிக் கணக்கானபேர் உயிர்துறந்தனர். சண்டைக்கு முடிவுவராதுபோல் தோன்றிற்று. 15-ம் ஆசீர்வாதப்ப பாப்பானவர் தேவதாயைச் சமாதானத்தின் இராக்கினியென்று அபயமிட்டார். எட்டுநாட்களுக்குப்பிறகு பாத்திமாவிலே மாதாவின் பதில் கேட்டது.

**பாத்திமா:** மாதாகொடுத்தகாட்சிகளில் இதுதான்அதிமுக்கியமானது. தமதுபோதனைகளையும், எச்சரிக்கைகளையும் பிரசுரிக்கும்படி மாதா வற்புறுத்திக் கேட்டுக்கொண்டாள். 1917-ம் ஆண்டு மாதாகூறியதாவது: சண்டைமுடியப்போகிறது. ஆனுல், மக்கள் பாவஞ்செய்வதை நிறுத்தாவிட்டால் இதைவிடக்கொடிய இன்னெருசண்டை ஆரம்பமாகும். ஓர் இரவில் யாரும்அறியாத புதுஒளி பிரகாசிக்கும். (தை 25, 1938) கடவுள்கொடுக்கும் பெரியதண்டனையின் அடையாளம் இதுதான்என்று அறிந்துகொள்ளுங்கள். பெரிய போரும், பஞ்சமும்வரும். திருச்சபைக்கும், பாப்பானவருக்கும் விரோதமாகக் கலாபனைநடக்கும்.

மாதா தீர்க்கதரிசனமாகக் கூறியதெல்லாம் நிறைவேறிவிட்டது. ருஷியா மனந்திரும்பும்வரை சண்டை, துன்பம், அழிவு பெருகிக்கொண்டேபோகும். எப்பொழுது மாதாவின்வேண்டுகோள் நிறைவேறுமோ அப்பொழுதுதான் ருஷியா மனந்திரும்பும். மரியன்னையின் வேண்டுகோள்கள்தான் எவை? மாதாவே கூறுகிறுள் கேள்:

1. "பாவிகளை மீட்பதற்காக என் மாசற்ற இருதயப்பக்தி உலகில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று கடவுள்விரும்புகிறுர். நான் சொல்வதை மக்கள்செய்தால் அநேக ஆத்துமங்கள் இரட்சிக்கப்படும், சமாதானம் ஏற்படும்."

2. "விசுவாசிகளை எச்சரிக்கை செய்ய வந்திருக்கிறேன். அவர்கள் தங்கள்சீவியத்தைத் திருத்திக்கொண்டு தங்கள்பாவங்களுக்காகத் தேவமன்னிப்பைத் தேடவேண்டும். அவர்கள் இனிமேல் பாவங்களால் ஆண்டவருக்கு வருத்தம் வருவிக்கக்கூடாது. ஏனெனில், ஏற்கனவே அவர் அநேகபயங்கரமான பாவங்களால் புண்பட்டிருக்கிறுர்."

3. "மக்கள் தினந்தோறும் செபமாலை விடாது சொல்லட்டும்."

4. "ஐந்துமாதம் முதற்சனிக்கிழமைகளில் விடாமல் யார் பரிகாரம்செய்யும் கருத்தோடு பாவசங்கீர்த்தனம்பண்ணித் திவ்வியநன்மை உட்கொண்டு, செபமாலைசொல்லிச் செபமாலையின் இரகசியங்களைப் பற்றி என்னேடு 15 நிமிடங்கள் தியானித்துக்கொண் டிருக்கிருரோ அவருக்கு மரணநேரத்தில் இரட்சணியத்திற்கு வேண்டிய வரங்களோடு நான்வந்து உதவிபுரிவேன் என்று என்பெயரால் பகிரங்கப்படுத்து."

5. "தன்னையும், தனது குடும்பத்தையும் தேவ்தாய்க்குஒப்புக்கொடுத்தல். இந்த ஒப்புக்கொடுத்தலின் வெளிஅடையாளம் கார்மேல்மாதா உத்தரியத்தை எப்பொழுதும் அணிந்துகொள்ளுதல். தன்னையே ஒப்புக்கொடுத்தலானது தன்செபதபங்கள், ஒறுத்தல்கள், நற்கிரிகைகள் எல்லாவற்றையும் ஆத்தும ஈடேற்றத்திற்காக ஒப்புக்கொடுத்தலைக் குறிக்கும்."

உலகத்தையே அதிரச்செய்யும் பாத்திமாசெய்திகூட அவமதிக்கப்பட்டது. தீர்க்கதரிசனப்படியே இரண்டாவதுஉலகப்போர் வந்தது. சண்டை முடிந்தபோதிலும் நாஸ்திகம், வேதகலாபனை, அடிமைத்தனம் தீர்ந்தபாடில்லை. சமாதானமும், சந்தோஷமும் வந்தபாடில்லை.

உலகம்உய்ய ஒரேவழிதான் உண்டு. தேவதாயின் வழியாகக் கடவுளிடம்திரும்புதல். இறுதியில் தமது மாசற்றஇருதயம் வெற்றி பெறும்என்று நமது மாதா வாக்குறுதி கொடுத்திருக்கிறுள். அந்த நாளை விரைவில் கொண்டுவருவது நமது செபதபசீவியத்திலே அடங்கியிருக்கிறது. அவளுடைய வேலை நமது வேலையாகும். அவளுடைய வெற்றி நமதுவெற்றியாகும்.

—வே. க. குரலொலி

---

● பெல்ஜியத்திலே 34 வருடங்களாக ஆசிரியத் தொண்டாற்றியதன்மேல 1917-ம் ஆண்டு பரமபதம் அடைந்தவரான அர்ச். டி லாசாலின் கிறிஸ்தியன் பிறதர்மார் சபையைச் சேர்ந்த சங். மூவாயானே மரியாபிறதருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளும்விஷயமாய்த் திருச்சடங்காசார திருச்சங்கம் சமீபத்தலே கலந்து விவாதித்திருக்கிறது.

## 25 வருடங்களின்பின்

கொழும்புத்துறை, சஞ்சூசையப்பர் ஆசிரியபயிற்சிக் கழகத்திலிருந்து ஆசிரியராக வெளியேறி 1-9-31 தொடக்கம் கத்தோலிக்கபாடசாலைகளில் பெரும்பாலும் தலைமைஆசிரியர்களாகத் தொண்டாற்றிவரும் திருவாளர்கள் எஸ். ஜி. பரஞ்சோதி, எம். பிலிப்பானந்தம், எஸ். இராஜேந்திரம், வி. மரியாம்பிள்ளை, எவ். யோசெவ், என்.ஜே. வேதநாயகம், பி. எஸ். ஞானப்பிரகாசம் ஆசிரியர்கள் எழுவரும் 25 வருடங்களின்பின் 1-9-56-இல் கொழும்புத்துறைத்தாபனத்தில் நன்றிசெலுத்தும்முகமாக ஒன்றுகூடித் தங்கள் ஆசிரியசேவையின் 25 வருட பூர்த்தி விழாவைக் கொண்டாடினர்.

அன்றுகாலை அவர்களின் பழைய தாபனத்தலைவராகிய வண. எம். எஸ். நல்லையா சுவாமியவர்கள் கன்னியர்மட, தாபனப் பாடகர்குழாம் தோத்திரப்பாக்கள் படிக்கத் திவ்வியபூசை நிறைவேற்றினுர். பின்னர் "தெதேயும்" பாடித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. பிரதிமைப் படமும் பிடிக்கப்பட்டது.

பின்னர் நடந்த விருந்தின்போது தலைமைவகித்த வண. எம். எஸ். நல்லையா சுவாமியவர்கள், " இக்கழகத்திலிருந்து வெளியேறிய நீங்கள் எழுவரும் 25 ஆண்டுகளுக்குப்பின்னர் இக்கழகத்தில் உங்கள் பழையதலைவர், உங்களைப்பயிற்றிய ஆசிரியர்களோடு ஒன்றுகூடி ஆசிரியசேவையின் 25வருட பூர்த்திவிழாவைக் கொண்டாடி நன்றிசெலுத்தியமை பாராட்டத்தக்கதும் மற்றும் ஆசிரியர்களால் பின்பற்றத்தக்கதுமான சிறந்தகாரியமாகும்" எனக்கூறிநின்றுர். அத்தருணம் 25 வருடங்களுக்குமேல் ஆசிரியசேவையிலிருந்து இளைப்பாறியவரான அவர்களின் பழையஆசிரியர் எம். ஈ. பிறஞ்சிஸ்பிள்ளை அவர்களும், கடைசிமட்டும் அவர்களைப்பயிற்றி அவர்களோடு மாறிச்சென்ற ஆசிரியர் எஸ்.பி. திருச்செல்வம் அவர்களும் யூபிலிஆசிரியர்களுக்குப் புகழ்ந்துரை கூறினர்.

ஈற்றில், ஆசிரியர் என். ஜே. வேதநாயகமும், ஆசிரியர் பி. எஸ். ஞானப்பிரகாசமும் எல்லோருக்கும், விசேடமாக அவ்விழாவைச்சிறப்புற ஒழுங்குசெய்து, சம்பிரமமான விருந்தும்அளித்ததாபன பழைய, புதியதலைவர்களான வண. சுவாமி மரியாம்பிள்ளை, பி. ஏ. அவர்களுக்கும், வண. சுவாமி தியோகுப்பிள்ளை, பி. ஏ., டிப் - இன் - எட்., பி. எச். டி., டி. டி. அவர்களுக்கும் நன்றிகூற விழா இனிது நிறைவாயது.

— நிருபர்

---

● பூமிக்கடியிலுள்ள லோகப்படிவங்களைக் கண்டுபிடிக்குமாறு புது விமானம்ஒன்றை உபயோகிக்கும்முறை ஆரம்பமாகியிருக்கிறது. இதனைப் "பறக்கும் பரிசோதனை கூடம்" என்றே சொல்லலாமாம். இந்தவிமானம் ஓர் பிரதேசத்தின்மேல் வட்டமிட்டாலே போதும், பூமிக்குக்கீழே 300 அடி ஆழத்திலுள்ள நிக்கல், செம்பு, துத்தநாகம் முதலாம்லோகங்கள் என்ன அளவிலே உள்ளனஎன்பது தெரிந்துவிடுகிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதான பூந்தோட்டம்

இரண்டாவது மகாயுத்தத்திலே ஹிரோஷிமா, நாகாசகிஎன்னும் இரு ஜப்பானிய நகரங்களிலும் உலகசரித்திரத்தில் முதன்முதலாக அணுக்குண்டுகள்வீசப்பட்டுப் பெரும்அனர்த்தங்கள் ஏற்படலாயின. இந்நகரங்கள் இரண்டிலும் அணுக்குண்டுகள்விழுந்த இடங்களைப் பூங்காவனங்கள் ஆக்குவதற்கான ஏற்பாடுகளை ஜப்பானிய மாணவர்கள் இப்போது செய்துவருகின்றார்கள். இருஇடங்களிலும் பூந்தோட்டங்கள்அமைப்பதற்குக் குழிகள்தோண்டப்படுகின்றன. உலகின் 32நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் விதைகள்கொண்டு இருதோட்டங்களிலும்பூங்கன்றுகள்உண்டுபண்ணப்படும். அணுக்குண்டுத் தாக்குதலுக்குப் பலியான ஜப்பானியபிள்ளைகளின் ஞாபகார்த்தமாக இப்பூந்தோட்டங்களை அமைக்க இருநகரசபைகளும் அணுக்குண்டுவிழுந்த இடங்களை நன்கொடையாக வழங்கியிருக்கின்றன.

## மகனை இழந்தவருக்கு நஷ்டஈடு

கும்பகோணத்திலே அரசலாற்றுக்குச் செல்லும்வீதியில் ஒருகிழத்தென்னைமரம் உளுத்துப்போயிருந்தது. இந்தமரம் பொதுசனங்களுக்கு அபாயம் விளைவிக்கத்தக்க நிலைமையிலே இருந்தமையால் அதனைத் தறித்துவிடும்படி அவ்வீதியில் வசித்தவர்கள் நான்குமாதங்களுக்குமுன் நகரசபைக்கு மனுப்பண்ணிக் கொண்டார்கள். ஆனால், நகரசபை நடவடிக்கைஏதும் எடுத்துக் கொள்ளவில்லை. நிற்க, ஒருநாள் இராமசாமி மேஸ்திரிஎன்பவரின் ஒரேமகனான மூன்றரைவயதுச் சிறுவன்மீது அந்தக் கிழத்தென்னைமரம் விழவே, அவன் இறந்துபோயினான். மகனைஇழந்த இராமசாமி மேஸ்திரி நஷ்டஈடுகோரிக் கோட்டிலே வழக்குத்தொடர்ந்தார். அவருக்கு நஷ்டஈடாக 600 ரூபாவும், கோட்டுச்செலவாக 2,000 ரூபாவும் நகரசபை கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பாயிற்று. நகரசபையார் செய்தபிழைக்கு நகரவாசிகளா நஷ்டஈடுகொடுப்பது?

## மகாராணியாரின் வருமானம்

பிரித்தானியதேச இரண்டாவது எலிசபேத் மகாராணியார் இன்று உலக முழுவதிலுமுள்ள செல்வந்தர்களில் ஒருவராக விளங்கிவருகின்றார். அவரின் வருடவருமானம் ஏராளமானது. பிரித்தானிய பாராளுமன்றம் அருளும் சலுகைப்பணமும், பண்ணை வருமானமும் நீங்கலாக வேறும் மேலதிக வருமானம் அவருக்குண்டு. இன்னும் பந்தயக்குதிரைகள் மூலமாகவும், இங்கிலாந்தின் கடற்கரைகளிலே திமிங்கலங்கள், சுறாமீன்கள்பிடிப்பதன்மூலமாகவும், ஏழுபெரிய அரண்மனைகள், எட்டு இராசவிடுதிகள் மூலமாகவும் ஏராளமான வருமானம் அவருக்குக் கிடைக்கிறது. அவருடைய அரண்மனையிலே 12,200 ரூ த்தல் நிறையுள்ளனவும், 3 கோடியே 52லட்சம்ரூபா பெறுமதியுள்ளனவுமான தங்கப்பாத்திரங்கள் இருக்கின்றன. பாராளுமன்றப் பொதுமக்கள்சபையிலிருந்து அவருக்கு வருடமொன்றுக்குக் கிடைக்கும்பணம் 5லட்சத்துத் 98ஆயிரத்து 500 பவுண். 50 வருடங்களுக்கு முன் அவரின் பாட்டனான ஏழாம் எட்வாட் அரசரைக்காட்டிலும் அவருக்கு 16,300 பவுண் கூடுதலாகக் கிடைக்கிறது. ஆனால், அவரின் வாழ்க்கைச்செலவோ மும்மடங்குக்குமேல் அதிகரித்திருக்கிறது. முன்காட்டிய 5

# பல தேசங்களில்



லட்சத்துத் 98 ஆயிரத்து 500 பவுணிலும் 75 ஆயிரம பவுணே அவரின் சொந்தச்செலவுக்கும், மீதிப்பணம் பிரயாணச்செலவுமுதலாம் பிறசெலவுகளுக்கும் போகிறது. மகாராணியாரின் நாயகரான எடின்பரோ கோமகனுருக்குப் பிரித்தானிய பாராளுமன்றம் வருடம்ஒன்றுக்கு 50 ஆயிரம் பவுண் உதவுகின்றது.

## ருஷிய அணுச்சக்திக் கப்பல்

அணுச்சக்தியால் இயங்குவதும், 16,000 தொன் நிறைகொண்டதுமான கப்பல்ஒன்றைச் சோவியற் ருஷியா நிர்மாணித்துக்கொண்டு வருவதாய்ச் சென்ற 3-ந்திகதியன்று மஸ்கோ வானொலி அறிவித்திருக்கிறது. கடலில் மிதந்துகொண்டுவரும் எத்துணைபெரிய பனிக்கட்டிமலைகளையும் இந்தக்கப்பல் உடைத்தெறிந்துவிட்டு முன்னேறிச் செல்லுமாம். இதனைக்கொண்டுசெல்ல நாள்ஒன்றுக்கு ஐந்துஅவுன்ஸ் எரிபொருள் போதுமென்று சொல்லப்படுகிறது. இதில் அமைக்கப்படும் யந்திரம் 44,000 குதிரைப்பலவேகமுடையதாயிருக்கும். மஸ்கோநகர தொழில்நுட்பக் கல்லூரியைச்சேர்ந்த இரு மாணவர்கள்சேர்ந்து அணுச் சக்தியால் இயங்கும் றெயில்வேஎஞ்ஜின் ஒன்றைத் தயாரித்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## நியூமனுக்குக் கடமைப்பாடு

இங்கிலாந்திலே பீற்றர்பரோபகுதியில் அங்கிளிக்கன் புரொட்டஸ்தாந்த சபைக் கனன்பாதிரியாராயிருந்து சமீபத்திலே கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொண்டவரான திரு. எட்வாட் றிச்அவர்கள் லண்டன்நகரிலே நியூமன் சர்வதேசநிலையத்தில் பேசியவிடத்து: "ஓர்கத்தோலிக்கர்என்றமட்டிலே இங்குமுதன்முறையாகப் பேசுவது எனக்குப் பெருங்காரியமாகும்; ஏனெனில், மற்றெவர்களைக்காட்டிலும் நியூமனுக்கு நான் அதிகம் கடமைப்பட்டிருக்கிறேன்; வேதசாஸ்திர வளர்ச்சி பற்றிய அவரதுவியாசமே முழுநிலைமைக்கும் வழிதிறந்துவிடலாயிற்று; நியூமன் அந்தப்பேரான வியாசத்தை ஒருபோதுமே முடிக்கவில்லை; அதில் கைவைக்கத் தொடங்கியபிறகுதான் அவர் ஆசா. டோமினிக் பார்பர்சுவாமியாருக்கு ஆளனுப்பித் தம்மைத்திருச்சபையில் சேர்க்கும்படியாகக் கேட்டுக் கொண்டார்" எனக் கூறலாயினர்

## அர்ச்சியசிட்டபட்டஞ்சூட்ட அடுக்கு

அங்கிளிக்கன்சபையிலும், அதனோடு சம்பந்தப்பட்டுள்ள சபைகளிலும் முன்னில்லாத அர்ச்சியசிட்டபட்டஞ்சூட்டும் இயக்கம்ஒன்று சமீபத்திலே பிரசித்தமாகியிருக்கிறது. கருதினல் நியூமன்உட்பட ஆடவர்களும், பெண்களுமான 44 பேரின் நாமங்கள் இங்கிலாந்துச்சபையின் மேற்றிராணிமாருக்கெல்லாம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. சபை மேற்றிராணியாரால் அனுமதிக்கப்படும் "ஞாபகார்த்த பூசைக"ளோடு மேற்றிராசன அர்ச்சியசிட்ட பட்ட[illegible] இங்[illegible] டம் குறிக்கின்றன. [illegible] லுள்ள ஓர்விஷேதம் யாதெனில், முன் சொன்ன 44 பேருள்ளும் இங்கிலாந்துச்சபையை அடியிட்டவர்களின் நாமங்கள் அடங்கியிராமையேயாகும். இன்னும் அர்ச்சியசிட்டபட்டத்துக்குத் தெரியப்பட்டுள்ளவர்களில் ஒருவரான ஜோண் வெஸ்லிஎன்பவர் பெரும்பாலான அங்கிளிக்கன்சபையாரின் ஏகோபித்த அங்கீகாரத்தைப் பெறுவாரோ என்பதும் சந்தேகம்.

## ஆங்கிலமும் இந்தியபிரதமரும்

புதிய டில்லிநகரிலே, பாராளுமன்றத்தின் மத்தியமண்டபத்தில் சென்ற 2-ந்திகதியன்று நடைபெற்ற மாகாண கல்விமந்திரிகளின் மகாநாட்டிலே இந்தியபிரதமர் நேருஅவர்கள் பேசியது வருமாறு: "இந்தியாவின் ஐந்து வருடத் திட்டத்தின்வெற்றி தொழில்நுட்பப் பயிற்சிபெற்றவர்களின் தொகையிலேயே தங்கியிருக்கிறது. தொழில்நுட்பப்பயிற்சி ஆங்கில மூலமே அளிக்கப்பட வேண்டும். இதனால்தான் போதிய திறமைசாலிகளை உற்பத்திசெய்வது சாத்தியப்படும். பொறுப்புவாய்ந்த வேலைகளைச்செய்யவிரும்பும் இளைஞர்கள் ஆங்கிலம், மற்றும் ருஷிய, பிரான்சிய, ஜேர்மனிய, ஸ்பானிய, சீன, அராபியமொழிகள் முதலிய அந்நியமொழிகளைக் கற்பதிலும் சிரத்தைசெலுத்தவேண்டும். ருஷியா, சீனுபோன்ற நாடுகளில்கூட ஆங்கிலம் சிரத்தையுடன் போதிக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலம் இன்று உலக மொழியாகத் திகழ்கின்றது. நாமும் ஆங்கிலத்தில் நல்லஅறிவு பெற்றிருக்கிறோம்."

* * *

● இங்கிலாந்திலே பூனைகளின் ஓட்டப்போட்டிகளும் நடைபெறுகின்றன. பூனைகள் ஓட்டப்போட்டிக்குரிய நிற அங்கிகளைத் தரித்துக்கொண்டு 220 யார்நீளமான நேர்பாதையிலே மின்சாரசுண்டெலிஒன்றைத் துரத்திச் செல்லுகின்றன.

● இந்தியாவிலே மாங்சிர் எனுமிடத்தில் சென்ற திங்கட்கிழமை நன்கு பழக்கப்பட்ட இராட்சத யானைஒன்று ஏதோ தின்றுகொண்டிருக்கையில் அருகிலிருந்த றெயில்வேஸ்ரேஷனில் ஓர்எஞ்ஜின் இட்டசப்தம் அதற்குஆத்திரமூட்டவே, அந்தஎஞ்ஜின் புறப்பட்டு வந்தசமயம்பார்த்துஅதுஓடிச்சென்று தன்முழுப்பலத்துடனும் அதனைத்தாக்கியது. இந்தத்தாக்குதலில் எஞ்ஜினே யானையைக்கொன்று அதன்உடலைச் சின்னாபின்னமாக்கிவிட்டது.

● இந்தியாவிலே குதிரைப்பந்தயங்கள் இன்னும் ஐந்து அல்லது பத்து வருடங்களில் தாமாகவே ஒழிந்துவிடுமென்று சென்னைஇராச்சிய மராமத்து மந்திரியான இராமநாதபுரம் இராஜா கூறுகின்றார். "நாட்டின் சமூக அமைப்பு முற்றாக மாறிக்கொண்டிருக்கிறபடியால் குதிரைப் பந்தயங்களுக்கு முடிவுகாலம் நெருங்கி விட்டது; புதிய சோஷலிஸ்த சமூகஅமைப்பில் குதிரைப்பந்தயங்களுக்கு இடங்கிடையா"தென அவர் தெரிவித்திருக்கிறார்.


## விற்பனைக்கு!

திரு. சுந்தரராஜன் எழுதிய உயர் வகுப்புக்குரிய "கம்பர் கவிதைக் கோவை" மூன்று பாகங்கள் அடங்கியது.

விலை ரூபா: 9-00
தபாற்செலவு: -55

கிடைக்குமிடம்:

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

"Welmar" "Broadwood"
PIANOFORTES

Also

Baby Organs, and Transposing Reed Organs, available.

WELMAR PIANO AND IMPERIAL ORGAN AGENCY,
171, St. James' Street, Mutwal,
COLOMBO 15.
Telegrams: "PETTIFLEUR"
COLOMBO.


## திருமண அறிக்கை

### சில்லாலை

சில்லாலையிலே கனகசூரிய முதலியார் வம்சத்தில் உதித்தவரும், திரு. லூக்கேஸ்பிள்ளை பெனடிற் அவர்களின் கனிஷ்ட புத்திரனும், வண. பா. அல்பிறேட் சுவாமியவர்களின் சகோதரமுறையானவரும், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த சங். சிஸ்றர் நற்றிவிற்றி அவர்களின் பெருமகனும், கொழும்பு போட்கம் மிஷனில் சேவை புரிபவருமான திரு நிறைசெல்வன் அல்பிறெட் மரியநாயகத்திற்கும், சில்லாலையில் காலிங்கராயர் முதலியார்வம்சத்தில் உதித்த திரு. மரியாம்பிள்ளை மனுவேற்பிள்ளையின் புதல்வியும், நெடுந்தீவு, கட்டளைக்குரவர் வண. ஜோண் சிங்கராயர் சுவாமியவர்களின் சகோதரியும், இளவாலை, திருக்குடும்ப கன்னியர்மடத்தைச் சேர்ந்த சங். சிஸ்றர் சென்டோனு அவர்களின்பெருமகளுமான திருநிறைசெல்வி மேரி பெர்னதேத் நேசத்திற்கும் கடந்த ஆவணிமாதம் 18-ந்திகதி காலை 7மணியளவில் கட்டளைக்குரவர் வண. எல். டெசி சுவாமிஅவர்களால் மெய்விவாகத்திருச்சடங்கு நிறைவேற்றித் திவ்விய பாடற்பூசை செய்யப்பெறலாயிற்று. பூசையின்பின் தம்பதிகள் பிரதிமைப்படங்கள் பிடிக்கப்பட்டதும் நாதசுரவாத்தியங்கள் இசைக்க, வீதியுலாப்போந்த புஷ்பாரங்கள் சூட்டப்பெற்று மணமகள் இல்லம்சேரவே அங்கு வெகுபரிமளிப்பான உபசாரணைகள் நடந்தேறின. இப்புதிய தம்பதிகள் அஷ்ட ஐஸ்வரியங்களும் பெற்றுப் பெருவாழ்வவாழப் பெருமான் அருள் புரிவாராக!

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பிறேக்நகர திருக்குழந்தை யேசுவின் அனுக்கிரகத்தினால் நான் அவரிடம் கேட்டுக்கொண்ட அநேகமான மன்றாட்டுகள் அனுகூலமாயின. அவருக்கு எனது தாழ்மையான நன்றியைத்தெரிவித்து, நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

Anton Rajakarier, Mis. Ap.

அற்புதவரத்தரான அர்ச். அந்தோனியாரிடம் எங்கள் புதல்வர் விஷயமாய் நாங்கள் கேட்டுக்கொண்ட மன்றாட்டு அனுகூலமாயிற்று. அவருக்கு எங்கள் நன்றி என்றைக்கும் உரித்தாகுக.

கொழும்பு — ஓர் பக்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

—X—

### கிழக்கிலங்கையில் சதாசகாயமாதா எழுந்தருளிய முதலாவது ஆலயத்தின் முதலாவது திருநாள்

31-8-56 வெள்ளிக்கிழமை சதாசகாயமாதா எழுந்தருளிய (ஆயித்தியமலை) ஸ்தலத்தில் திருநாள் கொண்டாடுமுகமாகத் தாண்டவன்வெளி, பரிசுத்தவியாகுலமாதா ஆலயத்தைச் சேர்ந்தவர்களும், இதர இடங்களிலிருந்து வந்துசேர்ந்தவர்களுமான விசுவாசிகள் அனைவரும் பரிசுத்தவியாகுலமாதா ஆலயமைதானத்தில் ஒன்றுகூடினார்கள். பின்னர் இருஆலயங்கட்கும் கட்டளைக்குரவரான வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமிகள் தலைமைதாங்க மாதாவின் திருச்சுரூபத்தை எழுந்தருளச்செய்து, அன்றுகாலை திவ்விய பூசைக்குப்பின் 6-30 மணியளவில் 20 மைல்தூரத்திலுள்ள சதாசகாய மாதாவின் ஆலயத்துக்கு எல்லோரும் தங்கள்யாத்திரையைத் தொடக்கினார்கள்.

இவர்கள் கால்நடையாகச்சென்று தன்னாமுனை, ஏறாவூர்முதலாம் இடங்களிலுள்ள இந்துபகதகோடிகளால் வரவேற்கப்பட்டு, ஈற்றில் காடியனாற்றை அடைந்தபோது அவ்விடத்திலுள்ள இந்துபக்தர்கள் மாதாவையும், யாத்திரிகர்களையும் இந்துஆலயமணியை ஆர்ப்பரிக்கச்செய்து வரவேற்றுச் சகலரையும் தேநீர் விருந்துபசாரமளித்து மகிழ்வித்தனர். ஈற்றில் திரு. கிருஷ்ணபிள்ளை (வேளாணபிவிர்த்திக் காரியாதிகாரி) அவர்கள் மாதாவையும், யாத்திரிகர்களையும்பாராட்டி, அரியஉபந்நியாசம்ஒன்று நிகழ்த்தினார். அன்னவர்களிடம் பிரியாவிடைபெற்றுக்கொண்டபின் மாதாவும், யாத்திரிகர்களும் ஆயித்தியமலைச்சந்தியில் வரவேற்கப்பட்டபோது பலரும் மாதாவுக்கு மாலைகள் அணிந்து மகிழ்ந்து மங்களவாழ்த்துகள் பாடித்துதித்தனர்.

பின்னர் எல்லோருங்கூடிச் செபமாலைஓதிக்கொண்டு ஆலய வீதியை அடைந்ததும், கட்டளைக்குரவர் ஆலயத்துள் சதாசகாயமாதாவை உயரிய இடத்தில் ஸ்தாபித்தார். பி. ப. 6 மணியளவில் அவர் ஆலயத்தை ஆசீர்வதித்தார். யாத்திரிகர்கள்எல்லோரும் ஆலயத்துட்சென்று, மிகுந்தபக்திசிரவணத்துடன் செபமாலைஓதி ஒப்புக்கொடுத்தனர். சுவாமிகள் மாதாவின்மகத்துவம் பற்றி ஓர்அரியபிரசங்கம் நிகழ்த்தினார். அனைவரும் ஒருமித்து மாதாவின் பிரார்த்தனை ஓதினர். இறுதியில் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று.

புதிய ஆலயத்தில் 1-9-56 சனிக்கிழமைகாலை 6 மணியளவில் சுவாமிகளால் முதற்திவ்வியபலிபூசை நிறைவேறியது. 9 மணிமுதல் 10 மணிவரை திருமணித்தியாலஆராதனை நடைபெற்றது. மாலை 6-30மணிக்கு எல்லோரும் மெழுகுவர்த்திகளுடன் இருஅணியாகநின்று தீபங்களாலும், மலர்களாலும் அலங்கரித்திருந்த மோட்டார்இரதத்தில் மாதாவின் திருச்சுரூபத்தை எழுந்தருளப்பண்ணி, ஆலயத்தை வலம்வந்தனர். அப்போதுஎல்லோரும் செபமாலை, பிரார்த்தனைஓதி ஒப்புக்கொடுத்தனர். சுரூபம் ஆலயத்துட் பிரவேசித்தபோது ஆலயம் மெர்க்குரிவிளக்குகளாலும், மலர்வளையங்களாலும் அழகுற அலங்கரிக்கப் பட்டிருந்தகாட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. அதன்மேல் வண. கட்டளைச்சுவாமிகள் "கிறிஸ்துவர்களுடைய சகாயமே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்று தொடக்கி விசுவாசிகள் மனதைக்கவரும்வண்ணம் ஓர்அரியபிரசங்கம்செய்தார். பின்னர் வண. எவ். செலர் சுவாமிகளும், வண. எல். அல்பகூக் சுவாமிகளும் உதவிபுரிய ஒலிபெருக்கி வசதிகளுடன் அவர் மாலைஆராதனை பாடித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் வழங்கினார்.

2-9-56 ஞாயிற்றுக்கிழமைகாலை 5-30 மணியளவில் சுவாமிகளால் திவ்வியபலிபூசை நிறைவேறியது. பின்னர் காலை 7 மணியளவில் அனைவரும்ஒன்றுசேர்ந்து, ஆயித்தியமலைச்சந்தியில் மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்களை வரவேற்று, மலர்மாலைகள் அணிந்து நிலபாவாடைமீதுவாத்தியங்கள்முழங்க ஆலயத்துக்கு அழைத்துச்செல்லவே, அங்கு திரு. விக்றர் வல்தசார்என்பவர் ஓர்வரவேற்பு உபசாரப்பத்திரம் வாசித்துவழங்கினார். அதற்கு ஆண்டவர் அவர்கள் நன்றிகூறியபின் காலை 7-30 மணிக்குத் திருநாட்பூசை நிறைவேற்றிப் பிரசங்கஞ்செய்து திவ்வியநற்கருணை ஆசீர்வாதம்வழங்கினார். அப்பிரசங்கத்திலே, நமது திரிகோணமலை மேற்றிராசனத்தில் சதாசகாயமாதாவுக்கென நிருமாணிக்கப்பட்ட ஒரே ஆலயம் இதுஎனக்கூறி, நமது மேற்றிராசனத்துள்ள சகலகத்தோலிக்கமக்களும் இதை ஓர்யாத்திரைஸ்தலமாகப் பாவிக்கவேண்டுமென்றும், அவர்கள் அடிக்கடி வந்து மாதாவைத்தரிசிக்க வேண்டுமென்றும்கேட்டு எல்லோரையும் ஆசீர்வதித்தார். காலை 10 மணியளவில் ஆயித்தியமலைவாசிகளால்அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டதுடன் திருநாள் இனிதுநிறைவேறியது.

வண. கட்டளைச்சுவாமிகளின் கேள்விப்படி, பிரயாணவசதிகள் செய்துகொடுத்த ஊவா பஸ்கம்பெனியாருக்கு அவர் நன்றிதெரிவிக்கின்றார்.

— நிருபர்

### மேலதிகமான றெயின்கள்

தற்போது நடைபெறுகின்றவழமையான றெயின் வண்டிச்சேவையுடன் மேலதிகமாக மூன்றுவிசேஷ றெயின் வண்டிகளை அநுராதபுரத்துக்கும், வவுனியாவுக்குமிடையே ஓடவிடுவதற்கு றெயில்வேப்பகுதி முடிவுசெய்துள்ளது. அதன்பேரில் சென்ற 3-ந்திகதிதொடக்கம் மூன்று றெயின்வண்டிகளினதும் சேவை ஆரம்பமாகியிருக்கிறது.

### மான்எனநினைத்து மனிதனை

மெதபத்தகொடை எனும்காட்டிற்கு வேட்டையாடச்சென்றபலாங்கொடைவாசிகளான ஐந்தும்பர் ஓர்மானைத் துரத்திக்கொண்டு பலதிசைகளிலும் ஓடிச் சென்றபோது, ஈ. எல். யூசுப் என்பவர் தனதுதலையில் கட்டியிருந்த கண்ணாடிலைற்வெளிச்சம் மங்கிப்போனதும் கீழேஉட்கார்ந்துவிட்டார். அப்போது நூறுயார் தூரத்துக்கப்பால் நின்று இலக்குப்பார்த்த எஸ். எல். சலீம்என்பவர் யூசுப் தலையில்கட்டியிருந்தகண்ணாடி மானின் கண்களைப் போன்று இருந்தமையால் அது மான் தான்என்றுநினைத்துத் தனதுதுப்பாக்கியால் சுட்டார். சுட்டதும் துப்பாக்கிக்குண்டு யூசுப்பின்கண்களையும், மூளையையும் தாக்கியது. அதன்மேல் அவருடனசென்றவர்கள் அவரைப் பலாங்கொடைஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றார்கள். அங்கேயூசுப் மறுநாட்காலை இறந்துபோயினார்.

### அரசாங்கசேவையில் தமிழர்

இதுகாலவரை தமிழ்ப்பேசும்மக்களே அரசாங்கசேவைகளில் நிறைந்துகிடக்கிறார்களென்றும், சேவையில் 60 சதவீதத்தினர் தமிழரென்றும், 80சதவீதத்தினர் தமிழரென்றும் தப்பான பிரசாரங்கள் செய்துவந்தனர் சிங்களமக்களில்சிலர். ஆனால், இப்போது புள்ளிவிபரங்களைச் சரியாகஆராய்ந்து பார்த்ததின்விளைவாகச் சிலதுறைகளில் தமிழர் 35 வீதமிருந்தாலும் எல்லாத் துறைகளையும் சராசரியாகக் கணக்குப் பார்க்கும்பொழுது தமிழ்ப்பேசும் மக்கள்தொகையின் விதாசாரம்பத்தெனத் தெரியவருகிறது.

### தண்ணீர் இறைக்கும் காற்றாடியந்திரம்

தொண்டைமானாற்று அணைக்கட்டின்பக்கமாகப் பிரமாண்டமான காற்றாடியந்திரம்ஒன்றை இணைக்கும்வேலைகள் பூர்த்தியடைந்திருக்கின்றன. தண்ணீர் இறைப்பதற்கென்று இந்தக் காற்றாடி கனடாதேசம்வழங்கிய நிதிஉதவிகொண்டு அமைக்கப்பட்டிருப்பதாகவும், இது சிறந்தபலன் அளிக்குமிடத்து யாழ்ப்பாணத்தின் ஏனைய பாகங்களிலும் தோட்டக்காணிகளுக்கு நீர்ப்பாய்ச்சுமாறு இதுபோலும் காற்றாடியந்திரங்களை இணைத்துதவக் கனடாஅரசாங்கம் முன்வந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

### சேனநாயக உருவச்சிலை

கல்லோயாத்திட்டத்தின் சிற்பியென்று அழைக்கப்படுகிறவரான காலஞ்சென்றபிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்களின் உருவச்சிலையானது கல்லோயா அணைக்கட்டுடன் அமைந்துள்ள சுமார் 70 அடிஉயரமான கற்பார்ஒன்றில் அமைக்கப்படவிருக்கிறது. இதனை அமைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போதுசெய்யப்படுகின்றன. கல்லோயா நீர்த்தேக்கத்தைப் பார்த்தபடியே நிற்கும் தோற்றத்திலே ஆறு அடி உயரமான இந்தவெண்கலஉருவச்சிலை அந்தக்கற்பாரில் அமைக்கப்படும். அதனைச்சூழவரவுள்ள பகுதியில் அழகியபூந்தோட்டம்ஒன்றும், கல்லோயாவின்தோற்றத்தைக் கண்டுகளிப்பதற்கான உயர்மேடைஒன்றும் ஸ்தாபிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

### சிங்கள பெரமுனையின் நடைபவனி

சென்றவாரம்நடந்த சிங்களஜாதிக பெரமுனைப் பொதுக்கூட்டத்திலே பாராளுமன்றத்தில் வெலிமடைப்பிரதிநிதியான திரு. கே. எம். பி. இராசரத்தினவும், ஆவரதுநண்பரும், இலங்கைச்சர்வகலாசாலை விரிவுரையாளரும், ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தவருமான திரு. ஏ. பி. ஜயசூரியாவும் இம்மாதம் 27-ந்திகதியன்று ஒருநல்லெண்ணத் தூதுக்கோஷ்டியின் தலைவர்களாய் யாழ்ப்பாணத்திற்கு யாத்திரைபோகும்படி கேட்கப்பட்டுள்ளனர். ஆனால், இந்தயாத்திரையைப் பிரதமர் அனுமதிக்கவில்லை. ஆனால், திரிகோணமலைக்கு அச்சங்க பிரதிநிதிகள் நடத்த உத்தேசித்திருக்கும் நடைபவனியை

## லூசிப்பேரின் சுயகுணம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லோகத்திலிருந்து பூலோகத்துக்கு இறங்கிவரவுமில்லை. அதற்காக உயிரைக்கொடுக்கவுமில்லை. நானுயிருந்துகொண்டு எனக்கெதிராக இப்படியெல்லாம் பேசுவானேன். ஒருவேளை நீயும் மனந்திருப்புப் போகிறாயாக்கும். என்றாலும் அவரே (கிறீஸ்துநாதரே) என்னை இப்படிப் பேசும்படி வலுவந்தப்படுத்துகின்றார். என்னை அவரே எனக்கெதிராக உபயோகிக்கின்றார். அவர் எப்போதும் என் மனக்கண்களின் முன்னே இருக்கின்றார். முன்னொரு காலம் எவ்வளவோ பரவசத்துடன் அவரைநான் ஆராதித்தபொழுது இருந்ததன்மையாய் இப்பொழுதும் என்முன் இருக்கிறார். ஆ! அச்சமயத்தில் நான் உணர்ந்துகொண்ட ஆனந்தபரவசத்தைச் சுத்தவாளர் என்னப்பட்டவர்கள் உணரக்கூடுமென்றால் அவர்களின் இருதயமெல்லாம் பொடிப் பொடியாகப் போய்விடும்.

(தொடரும்)

---

※ முதலாவது ஆகாயப் பிரயாணம் எபபோது, எங்கேநடைபெற்றது?

இற்றைக்கு 170 வருடங்களின் முன் இங்கிலாந்திலே நடைபெற்றது. 1784-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 15-ந்திகதியன்று வின்சென்ற் லூனார்டி என்பவர் மூர்பீல்ட்ஸ் எனுமிடத்திலுள்ள பீரங்கிப்பட்டாள நிலையத்திலிருந்து தனது சலவாயுபலூனில் பறந்துசென்று தென்மிம்ஸ் எனுமிடத்தில் இறங்கினார். அவர்திரும்பவும் அங்கிருந்து மேலெழுந்துபறந்து கடைசியாக வெயர்எனுமிடத்துக்குச் சமீபமாக இறங்கினார். இந்தஆகாயப் பிரயாணம் இரண்டேகால்மணித்தியாலம் நீடித்திருந்தது. அவர் புறப்படும்போது ஏராளமானஉணவைக் கொண்டுசென்றபோதிலும் பலூனுக்கு அடிப்பாரமிட்ட மணலுடன் அதுகலந்துகொண்டதால் அவர் அதை உண்ணமுடியாமல் போய்விட்டது.

---

அவர் அனுமதித்திருக்கின்றார். இது வருகிற ஐப்பசிமாதம் 28-ந்திகதிவரையில் ஆரம்பமாகும்போல் இருக்கிறது.

### காலநிலை

பங்குனிவெயிலைப்போன்று உக்கிரமாகஎறிக்கின்றது வெயில். இரவிரவாகப் புயலைப்போன்று குளிர்காற்று உரமாகவீசி அதிகாலையில் ஓய்ந்துபோகின்றது. குளங்கள்பலவற்றிவரண்டுபோய்க் கிடக்கின்றன. நாட்பட்ட வரட்சிகாரணமாகப் பலகிராமங்களில் பனங்காய்ப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது. மழையையும்காணோம். மழைக்கோலத்தையும் காணோம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 6-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிருபைதயாபத்து மாதா

தோலகட்டியிலிருக்கும் சந்நியாசமடத்தை அறியாதார்இல்லை. அங்குள்ள துறவிகள் செபத்திலும், தபஊழியத்திலும் தம் வாணாளைச் செலவழிக்கின்றனர். மோனசபையார் என்றழைக்கப்படுகிற இச்சந்நியாசிகள் (கன்னியாஸ்திரிகளுமுண்டு). செபத்தை வாய்ச்செபம், மனச்செபமாக மாத்திரமல்ல, அக்களிப்புநிறைந்த கவியாகவும் நிறைவேற்றுகிறார்கள்.

இவர்கள் காலையில் வேலைக்குப் புறப்படுமுன்னும், மாலையில் பள்ளிகொள்ளுமுன்னும் தங்கள் நாச்சியாரான மரியன்னையின் சுரூபத்தைச் சந்திப்பார்கள். காலையில் மங்களம் பாடுகிறார்கள்; மாலையில் மாதாவை வாழ்த்துகிறார்கள். மாலையில்பாடுவது கிருபைதயாப மந்திரம். அரசியானதம்மாதாவைத் தோத்திரித்துப்புகழ அதற்குஇணையான பாடல் இல்லையென்பார்கள்.

அலைமேல் அலையெழுந்தவாறாய்ப் பாடப்படும் இக்கீர்த்தனம் கல்லையும் கரையச்செய்யும்சக்திநிறைந்தது. அன்றிரவு இந்தப்பாடலை நான் கேட்டபொழுது அச்சக்தியை உணர்ந்தேன். துறவிகள் உருக்கமாகப் பாடினார்கள். உண்மையுள்ளம் இல்லாதவன்தானும் அதைக்கேட்டு உள்ளத்துடிப்பு, ஆத்துமஉணர்ச்சி பெறாமற்போகான். துறவிகள் எல்லோரும் உணர்ச்சிவசத்தராய், "ஆதலால் எங்களுக்காகவேண்டி மன்றாடுகிற தாயே......" என்று குரல் உயர்த்திப் பாடிய பொழுது மக்கள் எல்லோரும் பெருமூச்சுவிடுவது போலிருந்தது. "...... உம்முடைய இரக்கக்கண்களை எங்கள்மேல் திருப்பியருளும்" என்றுபாட நானும் கூடச்செபித்தேன்—கண்ணீர்விட்டு யேசுவின் நாமத்தை அடித்தொண்டையால் உச்சரித்தபொழுது திகிலுணர்ச்சி பெற்றேன். இரங்கல்பாவாக, ஏழைபிச்சை கேட்பதுபோல், இரக்கமும், துக்கமும், மனஅங்கலாய்ப்பும் தெளிவுபெற "இந்தப்பரதேசங் கடந்தபிற்பாடு......பிரத்தியட்ச தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளு"மென்று கெஞ்சிக்கேட்டார்கள்.

நரகத்திலிருப்பவர்கள் செபிக்கக்கூடுமாகில் இவ்வசனங்களை உபயோகித்து, இத்தொனியில்தான் செபிப்பார்கள். ஒருவிதத்தில் மன்னிக்கமுடியாத பாவத்திற்காக மனஸ்தாபங்கொள்ளும் சிந்தனைகளில் அக்கப்பாடுபட்டு, கருமுகில்களிடையே மறைந்துவீசும் நம்பிக்கையென்னும் வெளிச்சத்தின் பிரபையால் கவிந்திருக்கும் இருளை ஊடறுத்து, உலகத்தை உற்றுநோக்கும் அவவின் முகத்தைக்கண்டதும் அந்த ஆத்துமம் அமைதிநிறைஇரவில் அத்துறவிகள் "கிருபாகரியே, தயாபரியே, பேரின்பரசமுள்ள கன்னிமாமரியே" என்று அபயக்குரலிட்டது போலக் கூவும்.

— கேட்டு மகிழ்ந்தோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோசாச் செண்டு

றோஸ் ஆறுவயதுச்சிறுமி. அவள் முள்ளில்லாத ஒரு றோசாச்செடிதான். நானும், அவளும் ஒரேவீட்டில் வாழ்ந்தோம். இருவரும் இணைபிரியாத நண்பர்களானோம். ஒருமித்துப் பூங்காசெல்வோம். கடற்கரைக்கு உல்லாசமாய் உலவப்போவோம். வேலைமுடிந்து வந்ததும், ஒன்றாய்க் கோவில் சந்திப்புக்குப் போவோம்,

ஒரு நாட் சாயந்தரம், றோஸ் ஒரு புதுப் பொம்மையுடன் தேவதாயாருக்கு அதைக் காண்பிக்கக் கோவிலுக்குச் சென்றாள். துணிவுடன் பெரிய கோவிலுக்குள் நுழைந்தாள், நாம்இருவரும் அக்கம்பக்கமாய் இருந்துதான் செபிப்போம். அன்று சாயந்தரம், றோஸ் என்பின் இருஆசனங்கள் தள்ளிஇருந்து மன்றாடினாள். சிறிதுநேரத்திற்குப்பின் திரும்பிப் பார்த்தேன் றோஸைக்காணவில்லை சுற்றும் முற்றும்பார்த்தேன், அவளைக் காணவில்லை. வியப்படைந்தேன். மனக்கலக்கமுற்றேன். றோசின் தாயார் என் துணையுடன்தான் அவளை வெளியே போகவிடுவாள். செபித்துக்கொண்டிருந்தவர்கள் ஒவ்வொருவரையுங் கேட்டேன். அவள் சென்ற இடத்தைப்பற்றி ஒருவராகிலும் தகவல்தரவில்லை. கோவிலுக்கு வெளியில் வந்து விசனத்துடனும், அங்கலாய்ப்புடனும் தொடர்ந்து மேலும் அவளைப் பற்றி விசாரித்தேன். திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. என்னசெய்வதென்றே எனக்குத்தெரியாது சிலைபோல் அசையாது சிறிது நேரம் நின்றேன். றோசியின் தாயார் கேட்டால் ஏதுகூறுவேன் என்றுகலங்கினேன்.

மறுபடியும் கோவிலுக்குள் நுழைந்தேன். றோசி மீண்டும் வரவேண்டும்என்ற கருத்துக்காக மூன்று பிரியதத்தமந்திரம் சொன்னேன். திரும்பிப் பார்த்தேன். ஆச்சரியம்! றோசி, கையில் ஒரு றோசாச்செண்டுடன் நிற்கக்கண்டேன். கண்டதும், அவளைக் கட்டித்தழுவி "எங்கு சென்றாய்?" என அன்புடன் கேட்டேன். "மாதாவுக்குப் பூ வாங்குவதற்காக, கோவிலுக்கு அண்மையில்இருந்த பூக்கடைக்குச் சென்றேன்" என்று சாதாரணமாகக் கூறினாள். தான் கொணர்ந்தபூவை மாதாவின் பாதத்தில் சமர்ப்பிக்கத் தன்னைச் சிறிது உயர்த்தும்படி பணிவாய் என்னைக்கேட்டாள்.

எனக்கு மிகவியப்பாக இருந்தது. ஏனென்றால், றோசி அன்று சாயந்தரம் தன்னுடைய பைக்குள் ஒரு 5 சதக்குற்றியும், செபமாலையும் மாத்திரம் வைத்திருந்ததைக் கண்டேன். "பூச்செண்டுவாங்க எப்படி அவளால் முடியும்? எதற்காக அதை இன்று வாங்கினாள்? ஏன் எனக்குச் சொல்லாது போனாள்?" இப்படி எண்ணங்கள் அலை அலையாக என் மனதில் எழுந்தன. எப்படியிருந்தும் றோசி வந்துவிட்டாள் என்று நினைத்து மட்டில்லா மகிழ்ச்சியடைந்தேன். அவள் எண்ணம் நிறைவேற, ஆசை பூர்த்தியடைய, அப்பூக்களை மாதாவின் பாதத்தில் சமர்ப்பிக்க உதவி செய்தேன்.

கோவிலை விட்டு வெளியே வந்ததும் அவளிடம் பூக்களின் விலையை விசாரித்தேன். தான் 5 சதம் கொடுத்ததாக அவள் கூறினாள். "யார் உனக்கு அதை 5 சதத்துக்குக் கொடுத்த"தென வியப்புடன் கேட்டேன். "அந்தப் பூக்கடையில் இருக்கும் கொழுத்த மனிதன்" என்றாள். இவ்வளவு குறைந்த விலைக்கு அப்படியொரு பூச்செண்டை யார் தான் கொடுக்கக்கூடுமென ஐயுற்று, உண்மையை அறியப் பூக்கடையை நோக்கி றோசியுடன் சென்றேன். எங்களைக் கண்டதும் பூ வியாபாரி கடையை விட்டு வெளியே வந்தான். குழந்தையின் கன்னத்தில் சிறு தட்டுக்கொடுத்துவிட்டு, நடந்தவற்றைக் கூறத்தொடங்கினான்.

"பதினைந்து நிமிடங்களுக்கு முன் இச்சிறுமி என் கடைக்கு வந்தாள். கடைக்கு வெளியில் நின்றுகொண்டு, அவதானத்துடன் ஏதோ ஒரு பூச்செண்டைத் தேடுபவள்போல் பூக்களைக் கூர்ந்து நோக்கினாள். ஏதோ புதிதாகக் கண்டவள் போன்று துணிவுடன் கடைக்குள் நுழைந்தாள். புன்னகையுடன், புனிதப் பெண் புரியும் செயல்களில் என் புலனைப் பறிகொடுத்து நின்றேன். கெர்ச்சிதத்துடன் நுழைந்து, இனிமையும் இரக்கமும் கலந்த குரலில் "இப்பூக்களைப் பார்வையிடலாமா?" என்று பரிவாகக் கேட்டாள். காலதாமதமில்லாமல் சந்தோஷத்துடன் அப்பூக்களை எடுத்துக் காட்டினேன். "என்ன

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

அடுத்த சனிக்கிழமை, புரட்டாசி 8-ந் திகதி, எங்கள் தேவதாயார் பிறந்த திருநாள். இத்தினம் எங்கள் எல்லோருக்கும் அகமகிழ்ச்சியைக் கொடுக்குந் தினம். ஏனெனில், தேவதாய் எங்கள் தாய். யேசு இரட்சகர் தமது மாதாவை எமக்குத் தாயாராகத் தந்திருக்கிறார் என்பதை நினைக்குந்தோறும் அர்ச். பேர்க்மன்ஸ் அருளப்பர் மனமுருகிக் கண்ணீர் விட்டழுவார்.

பிதாச் சருவேசுரன் எம்மை நேசிக்கிறபடியால், தமது ஏககுமாரனை எமக்குத் தந்தார். சுதனான யேசு எம்மை நேசிக்கிறபடியால் தமது திருத்தாயாரை எமக்குத் தாயாராக அளித்திருக்கிறார். இதை நினைக்குந்தோறும் நாம் மனமுருக வேண்டுமல்லோ! எம் தாயார் மட்டில் நாம் அன்பால் கொழுந்து விட்டெரிய வேண்டுமல்லவா? அந்த நேசத்தைப் புதுப்பிக்க, அதிகமதிகஞ் சுவாலை விட்டெரியச் செய்ய, தாயார் பிறந்த தினம் தகுதியன்றோ!



இத் தினத்தை நாம் ஞான ஆரவாரத்துடன் அனுசரிக்கவேண்டும். அதற்கு முன் தினத்தில் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்யுங்கள். எட்டாந் திகதியன்று காலையில் திவ்விய பூசை கண்டு திருவிருந்தருந்துங்கள். பின்பு தேவதாயாரின் திருச் சுரூபத்தைச் சந்தித்து உங்களை அத்தாயாருக்குக்காணிக்கையாகக் கையளித்து, கிறீஸ்துநாதர் அவவுடைய திரு உதரத்தில் உருவானது போல, உங்களிலேயும் அவர் உருவாகும்படி வேண்டிக் கொள்ளுங்கள்.

எமது பரலோக அன்னையை நினைக்கும்பொழுது எங்களைப் பெற்ற தாயாரின் எண்ணம் மனதில் உதிப்பது இயல்பு. அர்ச். பத்தாம் பத்திநாதர் மேற்றிராணிப் பட்டம் பெற்ற பின் தமது தாயாரைச் சந்திக்கப் போனார். மேற்றிராணியாருக்குரிய தமது மோதிரத்தைத் தாயாருக்குக் காட்டினார். அப்பொழுது அந்த அம்மாள் தமது விரலிலிருந்த கலியாண மோதிரத்தைக் காட்டி "மகனே, இந்தமோதிரத்தினாலே தான் நீ அந்த மோதிரத்தைப் பெற்றாய்" என்றார். நாம் நல்ல நிலைபரத்திலிருந்தால், நற்குண நற் செய்கைகளுள்ளவர்களாயிருந்தால், உத்தம பதவிகளைப் பெற்றிருந்தால் அவையெல்லாவற்றிற்கும் எமது பெற்றோர், சிறப்பாக எமது தாயார் காரணம் என்று நாம் அறிவோம். அறிந்து நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

ஆகையால், இத்தினத்தை எமது தாய்மாருக்கு நன்றியும் அன்பு நிறைந்த வணக்கமும் காட்டும் **தாயார் தினமாக** அனுசரியுங்கள். வீட்டிலுள்ள நீங்கள் எல்லாரும் பூசை வேளையில் அம்மாவுக்காக வேண்டிக் கொள்ளுங்கள். அப்பாவிடங் கேட்டு, அம்மாவுக்குப் பிடித்தமான புடவையையோ, வேறேதும் பொருளையோ அன்பளிப்பாகக் கொடுங்கள். மாலையில் உங்களுக்குத் தெரிந்த ஆடல்பாடல்களை அம்மாவுக்குமுன் ஆடிப்பாடிக்காட்டி அவவை மகிழச் செய்யுங்கள. நீங்கள் எப்போதும் சங்கையும், அன்பும், அமைச்சலும் காட்டுவீர்களென்று நல்வாக்குக் கூறுங்கள்.

எங்கள் தேவன்னை உங்களையும் உங்கள் தாய்மாரையும் காப்பாராக.

---

உங்கள் விஷயதானங்களை மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்:

**"அண்ணா", சஞ்சுசையப்பர் தாபனம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றேசாச் செண்டு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அழகான பூ" வென்றாள். விலையைக் கேட்டாள். யாருக்கு அப்பூவைக் கொடுக்கப் போவதாக அவளைக் கேட்டேன். உடனே அவள் கூறியதாவது, "அன்பின் அறிகுறியாக இதைத் தேவ தாய்க்குக் கொடுக்கப் போகிறேன். அவ மிகவும் நல்லவ. நான் அம்மாவிடம் ஒரு பொம்மை வாங்கித் தரும்படி கேட்க அவ மறுத்து விட்டா. ஆனல், படுக்கப்போகுமுன் தேவ தாய்க்கு ஒரு கடிதம் எழுதித் தலையணைக்குள் வைத்து விட்டால், கட்டாயம் பொம்மை கிடைக்குமென்றுஞ் சொன்னள். சென்ற இராத்திரி நான் அப்படியே செய்தேன். இன்று காலை தேவ தாய் எனக்கொரு அழகான பொம்மையைத் தலையணைக்குக் கீழ் வைத்திருந்தா. தேவ தாய் எவ்வளவோ நல்லவ. அவவுக்கு நன்றியாக ஏதாகிலும் கொடுக்கப் போகிறேன்." உடனே நான் "பணம் எவ்வளவு உண்டு?" எனக் கேட்டேன். உடனே தன் பணப்பையைத் திறந்து இருந்தவற்றை யெல்லாம் கொட்டினள். ஒரு 5 சதக் குற்றியும், செபமாலையும் வெளிவந்தன. செபமாலைக்கு முத்தம் கொடுத்துவிட்டு, 5 சதக் குற்றியைப் பார்த்தவண்ணம் "என் வங்கியிலுள்ள பணமெல்லாம் இதுதான்" என்று கனிவாகக் கூறினள். எனக்கு இரக்கமாகவும், சிரிப்பாகவும் இருந்தது. அதன் விலையை நான் அறிவேன். அச்சிறுமியின் நீலக்கண்களில் தாண்டவமான மகிழ்ச்சி, பூச்செண்டு கிடைக்குமென்னும் நம்பிக்கை, தன் அன்பின் அடையாளமாக மாதாவுக்குக் கொடுக்கலாம் என்னும் வாஞ்சை, இவையெல்லாம் என் உணர்ச்சியை எழுப்பி அவளுக்கு அடிமையாக்கி விட்டன. குழந்தை கேட்பதைக் கொடாதவர் யாருண்டு? இனிய குழந்தையே இயற்கையின் மிக இனிய பொருள், பூச் செண்டைச் சிவப்புப் பட்டியினுற் கட்டிக் குழந்தையின் கையிற் கொடுத்தேன். அவளுக்கு அது நன்ருகப் பிடித்துக் கொண்டது. ஒரு நன்றிச் சிரிப்பைப் பரிசாக அளித்தாள். பின் ஓட்டமும் நடையுமாகக் கோவிலை நோக்கிச் செல்வதைப் பார்த்துக் கொண்டே யிருந்தேன்" என்ருன் அந்தப் பூக் கடை வியாபாரி.

உடனே நான் அவனிடம் பூக்களின் விலையைக் கேட்டேன். கேலியாக "விலை வாங்குபவனையும் விற்கிறவனையும் பொறுத்த ஒரு விஷயம்" என்ருன் அவன். "ஆனல், றேசி கொடுக்க வேண்டிய விலையை உனக்குக் கொடுக்க வில்லையே" என்று வியப்புடன் கேட்டேன். "அச் சிறுமி எல்லோரினும் பார்க்கக் கூடிய விலை கொடுத்தாள். அவள் தன் வங்கியில் உள்ள பணம் அத்தனையும் கொடுத்தாள். தன்னிடம் இருந்த பணம் முழுவதையும் தேவ தாய்க்குக் கொடுத்தாள். இதை விடக் கூடியவிலைக்கு என்னல் அப்பூச் செண்டை விற்க முடியாது" என்ருன் அவ் வியாபாரி. தேவதாயின் மேல் றேசிக்கு இருந்த அன்பே அன்பு. நாமும் அவளைப் போல் தேவதாய் மேல் அன்பு வைத்து, அப்போஸ்தலிக்க சேவை செய்து வருவோமாக.

---

## சரியானவற்றைத் தெரிதல்

1. ஒவ்வொருநாளும் செபமாலை சொல்லாதவர்கள் நரகத்திற்குப் போவார்கள்.

2. பிரசங்கநேரத்தில் பூசைக்குப்போய் பங்குபற்றுகிறது பாவமில்லையென்று "திருஞானதீபன்" கருதுகிருர்.

3. "திரேசாள்" பாவசங்கீர்த்தனத்தில் ஓர்பாவத்தை மறந்துவிட்டாள். என்ருலும், அவள் தேவநற்கருணைபெற்ருள். பின்னர் தான்செய்தது ஓர்தேவ (துரோகம்) நிந்தையைச் செய்ததாக வருந்துகிருள்.

4. ஒவ்வொருநாளும் நற்கருணை பெறுகிறவர்கள் இரண்டுகிழமைக் கொருமுறையென்கிலும் பாவசங்கீர்த்தனம் செய்தல் வேண்டும்.

5. பாவசங்கீர்த்தனம் செய்யமுடியாமல் மரணத்தருவாயில் இருப்பவன் மனஸ்தாபப்பட்டு அவஸ்தைப்பூசுதலைப் பெற்ருல் சகல பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன.

6. தன்னுடைய சொந்தத்தேவைக்குக் களவுஎடுப்பது பாவமல்ல.

7. ஞாயிற்றுக்கிழமைகளில் தேவஊழியத்திற் குகந்தவற்றைச் செய்யாதுவிட்டால் சாவானபாவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org